அறைவு 04 இயம் 21 Dec 19 - 25, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

**26ம் திகதி விடுமுறை**

நத்தார், புதுவருட விடுமுறைகளை முன்னிட்டு எதிர்வரும் 26ம் திகதி மலைமுரசு வெளிவராது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்


2016ல் சந்திப்போம்

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# கட்டுமானத்திற்குத் தடை



**திருக்கோணேஸ்வரத்தில் எவ்விதமான கட்டுமானப் பணிகளையும் முன்னெடுக்கக் கூடாது என தொல்பொருட் திணைக்களம் கட்டளை பிறப்பித்துள்ளது.**

இக்கட்டளையைத் திருக்கோணேஸ்வர பரிபாலன சபைக்கு அனுப்பியிருப்பதாகத் தொல்பொருட் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளராகத் திருகோணமலையில் நிலைப்படுத்தப்பட்டுள்ள டபிள்யூ.எச்.ஏ சுமனதாச தெரிவித்துள்ளார். 17

**புனானையில் தொடரும் சிங்களக் குடியேற்றம்**


## இனவாத ஆளுனரா கிழக்கில் ?



"கிழக்கில் புனானையில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதில் கிழக்கு மாகாண ஆளுநர் தீவிரம் காட்டி வருகின்றார்".

இராணுவ ஆளுநர் போய்விட்டார் என்று பார்த்தால் இனவாத ஆளுநர் வந்து விட்டாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## "திருமலையில் இருந்து நிலக்கரி அனுப்பப்படும்" - அமைச்சர்



திருகோணமலையில் இருந்து நிலக்கரியைத் தொடருந்து மூலம் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரியை கடல் மார்க்கமாக வினியோகிப்பதில் தடைகள் ஏற்படும் போது திருகோணமலையில்

## ஜோர்தானுக்கான இலங்கைத் தூதுவராகின்றார் கிண்ணியா ஏ.எல்.எம். லாபிர்



ஜோர்தான் நாட்டிற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கிண்ணியா ஏ.எல்.எம்.லாபீர். தனது உத்தியோகபூர்வ அறிமுகக் கடிதத்தினை ஜோர்தான் மன்னர் இரண்டாம் அப்துல்லா பின் அல் ஹுசைனிடம் அண்மையில் கையளித்தார்.

22 வருட சேவைக்காலத்தைக் கொண்ட, இராசதந்திர சேவையின் முதல் வகுப்பில் உள்ள இராசதந்திரி லாபிர் கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சட்டத்தரணியான இவர் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாலியல் இம்சைச் சந்தேகநபர் பணி நீக்கப்பட வேண்டும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தல்



இரா.ஸ்ரீஞானேஸ்வரன்

பாலியல் இம்சை முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்க மறியலிடப்பட்டுள்ள சந்தேகநபரைப் பாடசாலைச் சேவையிலிருந்து இடைவிலக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சரை வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகக் கிழக்கின் கல்வி அமைச்சர் கௌரவ தண்டாயுதபாணி உரிய விசாரணைகளைத் தனது கண்காணிப்பின் கீழ் மேற்கொண்டு உடனடி நடவடிக்கையை முன்னெடுக்க.... 17

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் ஸ்ரீலங்காவில்!



உலகிற்கே அச்சுறுத்தலாக உருவாகியுள்ள ஐஎஸ்ஐஎல் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்கு ஆதரவானவர்கள் இலங்கையிலும் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இந்தியன் ஓயில் கோப்பரேசன் நிறுவனத்தின் அலுவலர் ஒருவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அற்ப சொற்பங்களும் அரசியல் தீர்வும்!

தமிழர்களின் அரசியல் தீர்வு நோக்கி நகரும் முயற்சிகள் இன்று அனைத்துலகத்தின் கைகளில் தங்கியிருப்பதை அனைவரும் உணர்ந்திருக்கின்றார்கள்.

அனைத்துலகத்தின் கைகளில் எமது அரசியல் தீர்வு நோக்கி நகரும் முயற்சிகள் தங்கியிருக்கின்றனவே தவிர எமக்கான அரசியல் தீர்வல்ல.

தீர்வை அடைந்து கொள்ளும் முயற்சிகள் தந்திரோபாயங்களின் பாற்பட்டிருக்க, அரசியல் தீர்வு நிலையானதொன்றாக எம்மால் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

எம்முடைய பிரச்சனைக்கான தீர்வாக நாம் எதனை ஏற்றுக்கொள்ள முடியும் என்பது பற்றித் தெளிவாக நாம் வெளிப்படுத்த கடந்த ஆறு ஆண்டுகள் எமக்குத் துணையாக இருக்கின்றன.

தமிழர்களுக்கான தீர்வாகத் தமிழீழத்தைப் மட்டுமே பிரகடனப்படுத்தி, அதனை அடைவதற்கான முயற்சிகள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர் உச்சம் பெற்றன.

அரசியல் தலைவர்களால் முன்மொழியப்பட்ட தமிழீழப் பிரகடனத்தை அவ்வரசியல் தலைவர்கள் தமது அரசியல் போராட்ட வழிகளில் அடைந்து கொள்ள முயற்சித்த அவ்வரசியல் தலைவர்களிற் சிலர் விலைபோனதாலும், அக்காலத்தில் அரச தரப்பால் புரியப்பட்ட அடக்குமுறைகளாலும், அரசியல் வழிப் போராட்டம் சாத்தியமற்றது என்பதை இளைஞர் குழுக்கள் முன்நிலைப்படுத்த, அவ் வாய்ப்பைச் சாதகமாக்கிக் கொண்ட அயல்நாடு ஆயுதப் போராட்டத்தை ஊக்கப்படுத்தியதால், கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று தசாப்த காலங்கள் தமிழருக்கான தீர்வை அடைந்து கொள்ளத் தேவையான தந்திரோபாயமாக ஆயுதப் போராட்டம் முன்நிலைப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் இறுதிப்பத்தாண்டு காலப்பகுதியில், தமிழருக்கான தீர்வைக் கண்டுபிடிக்கவென உருவாகிப் பெரும் வளர்ச்சியை அடைந்திருந்த ஆயுதப் போராட்டத்தை அனைத்துலகின் முக்கிய நாடுகள் அனைத்தும் இணைந்து அழித்தொழித்து தமிழர்களுக்கான தீர்வைக் கண்டுகொள்ள ஆயுதப்போராட்டம் வழியல்ல என்று தெரிவித்துவிட்டன.

மீண்டும் அரசியல் வழியிலேயே போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நாம் கடந்திருக்கும் ஆண்டுகள் ஆறு.

இக்கடந்தகால வரலாற்றுப் பயணத்தில் நமது முயற்சிகள் ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் தமிழர்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமையிருக்கின்றது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆக, தமிழர்கள் இந்த நாட்டில் பிரச்சனையுடன் வாழ்ந்துவருகின்றார்கள் என்பதைக் கடந்த ஆண்டுக்கு முற்பட்ட காலங்கள் முழுவதும் சர்வதேசம் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டு இருந்தனர்.

ஆனால் கடந்த சனவரி 8ம் திகதி ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்தில் தமிழர்களும் விரும்பி அவ்வரசைத் தெரிவு செய்ததை அடுத்து தமிழர்களுக்கு இந்த நாட்டில் பிரச்சனைகள் இருப்பதான கருத்துக்கள் மழுங்கடிக்கப்படத் தொடங்கிவிட்டன.

அவ்வாறான பிரச்சனைகளே அற்ப சொற்பங்களாக எம்முன் தொடர்கின்றன. அவற்றைப் பேசி, அவ்வாறான அன்றாடப் பிரச்சனைகளை உலகம் முழுவதற்கும் தெரியப்படுத்துவதன் ஊடாகவே நாம் இன்றும் பல்வேறுவிதமான நெருக்கடிகளுக்குள் வாழ்கின்றோம் என்பதை உலகிற்கு வெளிப்படுத்த முடியும். அத்துடன் அவ்வாறு வெளிப்படுத்துவதன் ஊடாகவே நாம் எமக்குரிய தீர்வொன்றுக்கான தேவையை இன்னும் சுமந்துகொண்டிருக்கின்றோம் என்பதையும் நிறுவ முடியும்.

அவற்றை அற்ப சொற்பங்களாகப் பார்க்க எப்படி முடிகின்றது எமது அரசியல் தலைமையினால்?

தமிழ் மக்கள் இன்னும் முகாம்களில் வசிக்கின்றார்கள். அவர்களின் காணிகளில் இராணுவம் வசிக்கின்றது. முகாம்களில் இருந்து சம்பூரில் குடியேற்றப்பட்ட மக்களிற் பகுதியளவானவர்களின் காணிகளை மீண்டும் அபிவிருத்தி என்ற பெயரில் பிரதியீடாகக் காணி வழங்காமல் அரசு பறித்துக்கொள்ள முயற்சிக்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் தற்போது வரை விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை இலகுவாக விடுதலை செய்வதுடன் தமிழர்களின் மீது கடும் அழிவை ஏற்படுத்திய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என ஐக்கிய நாடுகள் சபையின் வரைபுக்கு ஆதரவளித்த போது கூறிவிட்டு அதனைச் செய்ய அரசு மறுத்துவருகின்றது.

அதேபோல மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறியும் ஆணைக்குழுவை கலைக்கவும் ஐ.நாவில் அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் யாழில் அவ்வாணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றுள்ளது.

இவ்வாறு பல அற்ப சொற்பங்களைத் தமிழ்த் தலைமை விட்டுக்கொடுத்துவிட்டு எந்த அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்போகின்றது?


# கிழக்கின் முயற்சியாளருக்கு விருதுகள்

திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனமும், தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து நடத்திய விருது வழங்கும் நிகழ்வினை நேற்று வெள்ளிக் கிழமை (18) ஜேகப் விடுதியில் நடத்தியது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கைளச் சேர்ந்த 18 முயற்சியாண்மையாளர்கள் விருதினைப் பெற்றுக் கொண்டார்கள்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண கல்வி மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி கௌரவ விருத்தினராகவும் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தனர்.

(கதிரவன்)



# சிறுவர் உரிமை நிகழ்வு

மூள்ளிப்பொத்தானை கோட்டக் கல்வி பிரிவுக்கு உட்பட்ட சுமார் பதிநான்கு பாடசாலைக்குமான சிறுவர் உரிமை சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் தம்பலகாமம் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம் எஸ் றியால் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு கிண்ணியா உதவி வலயக் கல்வி பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி உட்படப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் றியால் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கலந்துகொண்டவர்களுடன் உரையாடினார்

(ஹலீம்)



# இலங்கைவங்கியின் பிராந்தியக் கடன் வழங்கு நிலையம் திருமலையில் திறக்கப்பட்டது

இலங்கை வங்கியின் கிழக்கு பிராந்திய கடன் வழங்கு நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை (18) திருகோணமலை தபால் நிலைய வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

வங்கியின் பிரதி பொது முகாமையாளர் திருமதி சந்திராணி ஜயவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் வங்கியின் பல உயரதிகாரிகளும் கலந்து - கொண்டனர். (கதிரவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள்

## தேர்தலின் வாக்குறுதிகளை நிறைவேற்றறுமாறு கோரிக்கை

**அம்பாறை**

விவசாயிகளுக்கான உர மானியத்தை தொடர்ந்து வழங்குமாறும் நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறும் கோரி அம்பாறை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கல்லோயா விவசாய ஒருங்கிணைப்பு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவந்த உர மானியத்தை தொடர்ந்து அதேமுறையில் வழங்குமாறும் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டக்கமைய நெல்லுக்கான உத்தரவாத விலையின் படி நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்ட இறுதியில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துஷித பி.வணிகசிங்கவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் விவசாயிகள் அமைப்பின் தலைவர் கையளித்தார். ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக மாவட்டச் செயலாளர் இதன் போது தெரிவித்தார்.



# திட்டமிட்டு துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட இளைஞன் விளக்கமறியலில்

**அக்கரைப்பற்று**

அக்கரைப்பற்று கண்ணகிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதான குறித்த சிறுமி தனது வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டைச் சேர்ந்த நபர் சிறுமியை கடைக்குச் சென்று கைத்தொலைபேசிக்கான மீள்நிரப்பு அட்டையொன்றை வாங்கிவருமாறு பணத்தைக் கொடுத்துள்ளார். சிறுமி அட்டையை வாங்கிக் கொண்டு பக்கத்து வீட்டிற்கு உரியவரிடம் கொடுக்கச் சென்றபோது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதையடுத்து பெற்றோர் முறைப்பாடு செய்த நிலையில் குறித்த இளைஞரை காவல்துறை கைது செய்ததை அடுத்து அவனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# வீதி விபத்தில் ஒருவர் பலி

**வாகரை**

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து திருகோணமலைக்கு பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளே வாகரை கஜீவத்தைப் பகுதியில் வீதியை விட்டு விலகி மின்கம்பமொன்றுடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் க.விவேகானந்தராசா (வயது 52) சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளதுடன், அவரது மனைவி ரஞ்சிதம் விவேகானந்தராசா (வயது 49) படுகாயமடைந்துள்ளார். காயமடைந்தவர் வாகரை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

# நா.உ எஸ்.வியாளேந்திரனின் மீது கண்டன அறிக்கை

**மட்டக்களப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாளேந்திரன் 16.12.2015 அன்று நாடாளுமன்றத்தில் வடக்கு, கிழக்கில் வீட்டுத்திட்டங்களின்போது குறிப்பாக, கிராம உத்தியோகஸ்தர்கள் பணத்தை வாங்கி விட்டு மோசடி செய்வதாக கூறியுள்ளமையைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் கடந்த வியாழக்கிழமை கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள கருத்தை எமது மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர் எங்கே எப்போது என்பதைத் நிருபிக்க வேண்டும், நிருபீக்காவிட்டால், அவரது கருத்தை வாபஸ்பெற வேண்டும் என எமது சங்கம் கேட்டுக்கொள்வதுடன், இவ்விடயம் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் இர.சம்பந்தன் மற்றும், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் ஆகியோருக்கும் இவ்விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத வர்த்தகர்கள் கைது

**மட்டக்களப்பு**

சட்டவிரோதமான முறையில் வர்த்தகத்தில் ஈடுபட்ட பத்து வர்த்தகர்கள் மட்டக்களப்பு மாவடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் முத்திரையிடப்படாத நிறுத்தல் கருவிகள் மற்றும் அளத்தல் கருவிகளை பயன்படுத்தியமையாலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக சேவை திணைக்கள் பொறுப்பதிகாரி ஏ.எல்.நௌஸாத் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களாக ஓட்டமாவடி வாழைச்சேனை கிரான், செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு ஆகிய நகரங்களிலுள்ள அரிசி ஆலைகள், சில்லறைகடைகள், பொதுச்சந்தை, மீன்விற்ப்னை மையங்கள் பழக்கடைகள் உட்பட 80 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட வர்த்தகர்கள் அடுத்த மாதம் 6ம், 7ம் திகதிகளில் வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் நீதிமன்றங்களில் முன்னிலையாக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பதிவில்லாத பொருட்கள் கைப்பற்றப்பட்டன

**கல்லடி**




கல்லடி பொதுச் சுகாதாரப் பிரிவில் போலி லேபல் ஒட்டப்பட்ட 07 தேன் போத்தல்களையும் சுமார் 15 கிழங்கு சீவல் பக்கெட்டுகளையும் மற்றும் மருத்துவச் சான்றிதழின்றியும் அனுமதி பெறப்படாதும் உணவு தயாரித்து விற்பனை செய்துவந்த நடமாடும் உணவு வாகனமொன்றையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர். கல்லடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது, இவை கைப்பற்றப்பட்டதாக கல்லடிப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் க.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இவற்றை விற்பனை செய்தவர்களுக்கு எதிராக கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# அரசுக்கெதிரான சுவரொட்டிகள்




மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் முன்னிலை சோஷலிசக் கட்சியினால் அரசுக்கெதிரான வாசகங்களுடனான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் பாதிப் பதில் வேண்டாம், சகல அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்" "கூட்டரசாங்கம் பென்ஷனுக்கு வேட்டு, ஈபிஎப், ஈரிஎப் ஐ கொள்ளையடிக்கிறது" "உரமானியம் நாசம் அரசாங்கத்தின் குண்டில் சிக்காதிருப்போம்" "சகல காணாமலாக்குதல்களையும் வெளிப்படுத்து" போன்ற வாசகங்கள் அந்த சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

# இந்திய பிரஜைகள் விடுதலை

**கல்முனை**

அம்பாறை, கல்முனைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 04 இந்திய பிரஜைகளையும் கடந்த வியாழக்கிழமை கல்முனை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் விடுதலை செய்துள்ளார்.

சென்னையிலிருந்து கல்முனைக்கு ஒரு தொகை புடவைகளை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்த வேளையில் புதன்கிழமை கல்முனை காவல்துறையினர் இவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

குறித்த நபர்கள் வியாபாரத்திற்கான சகல ஆதாரங்களையும் காண்பித்ததையடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட புடவைகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**திருக்கோவில்**



திருக்கோவில், காயத்திரி கிராமத்தில் கைத்துப்பாக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கைதுசெய்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்களுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மேற்படி கிராமத்திலுள்ள வீடொன்றை சோதனையிட்டபோது, மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை கைப்பற்றியதுடன், மேற்படி சந்தேக நபரையும் கைதுசெய்துள்ளதாக காவல்துறையினர் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# அழுத்தங்கள் முடிவிற்கு கொண்டு வரப்பட்டன

## சனாதிபதி

கொழும்பு

நீதி சேவைகள் சங்கத்தனி வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, நிறைவேற்று அதிகாரம் கொண்டவர், நாடாளுமன்றத்-திற்கும், நீதிமன்றத்திற்கும் அழுத்தங்களை கொடுத்த காலத்தை தான் முடிவுக்கு கொண்டு வந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இருக்கும் மிதமிஞ்சிய அதிகாரங்களை குறைக்க தான் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்று கடந்த 11 மாதங்களில் நல்லாட்சியை உண்மையில் அர்த்தப்படுத்தும் வகையில் பல தீர்மானங்களை எடுத்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் ம்ற்றும் நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டிய சமநிலையை பாதுகாத்து நாட்டின் சகல துறைகளிலும் நல்லாட்சியை கட்டியெழுப்பு புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# உதவிகள் இலங்கைக்கும் கிட்டும்

## நூற்றாண்டு சவால் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு

எதிர்வரும் 2016 நிதியாண்டில் உதவி பெற தகுதியுடைய நாடுகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் நூற்றாண்டு சவால் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

அந்த கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி டனா ஜே. ஹைட்டிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் கிடைத்த வெற்றியில் ஒன்றாக இதனை கருதுவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குறுங்கால மற்றும் நீண்டகால ஆலோசனை வழங்குதல், நிதிசார்ந்த உதவிக வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# இராணுவ அதிகாரி விடுவிப்பு




பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், தடுத்து வைக்கப்பட்ட இராணுவ அதிகாரியான அக்குறு கங்கணம்கே இந்திக சஞ்சீவ, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

அவருக்கு எதிரான குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில், சட்ட ரீதியான பல கேள்விகள் உள்ளன. இதனை நிரூபிக்க தவறியமையால், இந்த குற்ற ஒப்புமூல வாக்குமூலத்தை நிராகரித்து அவரை விடுதலை செய்வதாக நீதிபதி கூறினார். யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற போது, கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்து, 50 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு இராணுவ இரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2005ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புச் சட்டப் பிரிவினரால் ஓமந்தை சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிகளுக்கு அனுமதி கோருகிறார் தலைவர்



அவன்ட்கார் பாதுகாப்பு சேவை தனியார் நிறுவனத்தின் துப்பாக்கிகளுக்கு 2016ம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரம் மறுக்கப்பட்டமை எதிராக அந்த நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிஷ்சங்க சேனாதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். தமது சேவைகளுக்காக 91 துப்பாக்கிகளுக்கு அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு கொழும்பு அரசாங்க அதிபருக்கு உத்தரவிடுமாறும், 2002 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சேவைகளுக்காக துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. எனினும் இம்முறை எவ்வித நியாயமான காரணமும் தெரிவிக்கப்படாது அனுமதிப்பத்திரம் வழங்குவது நிராகரிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிகள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி தெளிவுப்படுத்திக்கொள்ள இந்த மனுவை விசாரணைக்கு எடுக்குமாறும் விசாரணை முடியும் வரை நிறுவனத்திடம் இருக்கும் துப்பாக்கிகள் தொடர்பில் காவற்துறையினர் நடவடிக்கை எடுப்பதை தடுக்க இடைக்கால தடைவிதிக்குமாறும் நிஷ்சங்க சேனாதிபதி தனது மனுவில் கேட்டுள்ளார்.

# ஸ்டிக்கர் கலாச்சாரம்

## மீண்டுமொரு இனக்கலவரத்தை உண்டு பண்ண திட்டமா??

கொழும்பு

மூன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் பொதுபல சேனா முக்கியஸ்தர்கள் இணைந்து அண்மைய நாட்களாக இலங்கையில் புதிய ஸ்டிக்கர் கலாசாரமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

சிங்கலே (சிங்க இரத்தம்) என்பதே குறித்த ஸ்டிக்கரின் வாசகமாகும். தேசப்பற்றுள்ள, சிங்கள இனப்பற்றுள்ள அனைவரும் தமது வாகனங்கள், வர்த்தக நிலையங்களில் இதனை ஒட்டிக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்-பட்டுள்ளது.

இதன் மூலம் சிங்களவர்களின் வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்கள் தனித்து அடையாளம் காணப்படும் செயற்பாட்டை இந்த ஸ்டிக்கர் இலகுபடுத்தியுள்ளது. இதற்கிடையே குறித்த ஸ்டிக்கர் வர்த்தகம் இனக்கலவர-மொன்றுக்கான முன்னேற்பாடாக இருக்கலாம் என்ற சந்தேகம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது.

மிருசுவில் கூட்டுப் படுகொலை சம்பவத்தின் குற்றவாளியான இராணுவச் சிப்பாய் சுனில் ரத்நாயக்கவுக்கு விதிக்கப்-பட்டுள்ள மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு சிங்கள மக்கள் மத்தியில் பகிரங்கமாக நிதி திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.



# நடவடிக்கை எடுக்காவிடில் தீக்குளிப்பேன்

இன்றைய தினத்திற்குள் தோட்ட தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், பாராளுமன்றத்தினுல் தீக்குளிப்பதாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் விவாதமொன்றில் கலந்து கொண்ட போதே இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

# ஐ.எஸ் இற்கு இலங்கையுடன் அதாடர்பு உள்ளதா!!



பூனேயில் ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்ட 16 வயதான சிறுமி ஒருவரின் ஊடாக இயக்கம் குறித்த தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்செய்தியை இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் சிறிலங்கா முகவர் ஒருவருடன் குறித்த சிறுமி தொடர்பு கொண்டிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இணையத்தளத்தின் ஊடாகவே குறித்த சிறுமி இந்த தொடர்பினை மேற்கொண்டதாக மேலும் தெரியவருகின்றது.

ஏற்கனவே சிறிலங்காவின் கண்டி பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் இணைந்து உயிரிழந்ததுடன் அவர் தமது குடும்ப ஊறுப்பினர்கள் உள்ளிட்ட 16 பேரை இந்த இயக்கத்தில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியமனம் பெற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில்

நியமனம் பெற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் ஆயிரம் பட்டதாரிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பி வருவதாகவும் தெரியவருகின்றது.

தற்போது அரச தொழிலிலுள்ள பட்டதாரிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் தடை செய்யப்பட்ட மோட்டார் வாகன சலுகை ஆகியவற்றை மீண்டும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை சென்றுள்ளதுடன், அவர்களில் சுமார் 10 பேர் வரை ஜனாதிபதி செயலகத்திற்குள் அழைத்து செல்லப்பட்டு-ள்ளதாக மேலும் தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

சவுதி

## முதன் முறையாக பெண் வேட்பாளர் வெற்றி

மன்னர் ஆட்சி நடைபெறும் சவுதி அரேபியாவில் இதுவரை பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. பெண்கள் தேர்தலில் போட்டியிடவும் முடியாது, பெண்கள் வாகனங்கள் ஓட்டவும் அனுமதி இல்லை. கடந்த ஜனவரி மாதம் மன்னர் அப்துல்லா மரணம் அடைவதற்கு முன்பாக சில சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். அதில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், சவுதி அரேபியாவில் உள்ள நடைபெற்ற நகரசபைகளுக்கான தேர்தலில் 979 பெண்கள் உள்பட 6,440 பேர் போட்டியிட்டனர்.

இந்நிலையில் மக்கா நகரில் உள்ள மடறக்கா நகராட்சி உறுப்பினர் தொகுதிக்கு போட்டியிட்ட சல்மா பின்ட் அல்-ஒட்டெய்பி என்ற பெண் வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.



## சுமார் 1,000 இஸ்லாமியர்கள் கொன்று குவிப்பு யார் பொறுப்பு கூறுவது?

நைஜீரியா

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் தொடர்புடைய போகோ ஹாரம் என்ற தீவிரவாத அமைப்பு இயங்கி வருகிறது. கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமை ஆகிய இரு தினங்களில் சரியா என்ற நகரில் ஷியா இஸ்லாமியர்களுக்கும் ராணுவத்திற்கும் இடையே மோசமான கலவரம் வெடித்துள்ளது. இந்த தாக்குதலில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களை ராணுவத்தினர் இரக்கமின்றி கொன்று குவித்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், அரசு இதனை மறுத்துள்ளது. எனினும், உலகின் பார்வையில் இருந்து மறைக்க சரியா நகரில் கொல்லப்பட்ட இஸ்லாமியர்களை அரசு அதிகாரிகள் ரகசியமான இடங்களில் புதைத்து வருவதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளது.

இஸ்லாமியர்கள் மீது நடத்தப்பட்ட இந்த வெறித்தனமான தாக்குதல் குறித்து நேர்மையான மற்றும் விரைவான விசாரணை நடத்த வேண்டும் என நைஜீரியாவில் உள்ள அமெரிக்க தூதரகமும், மனித உரிமைகள் அமைப்பும் வலியுறுத்தியுள்ளது.



## பிரான்ஸ் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

### உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோருக்கு 300 மில். யூரோ

பிரான்ஸ்

பாரீஸில் கடந்த நவம்பர் 13ம் திகதி ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை படை தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டனர். 200க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த குடும்பத்தினருக்கு அரசு இழப்பீட்டு தொகையை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரான்ஸ் நாட்டு சட்ட அமைச்சரான Christiane Taubira வெளியிட்டுள்ள அறிக்கையில், உயிரிழந்த மற்றும் காயமடைந்த குடும்பத்தினருக்கு அளிக்கவுள்ள ஒட்டுமொத்தம தொகை 300 மில்லியன் யூரோவை எட்டும் என தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 6.7 மில்லியன் யூரோ வரை இழப்பீடு வழங்கி வருவதாகவும், இதுவரை 10 முதல் 20 மில்லியன் வரை இழப்பீடு வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



## இரு துருவங்கள் இணைக்கம்

கியூபா



அமெரிக்காவுக்கும் கியூபா-வுக்குமிடையேயான வழமையான வர்த்தக விமானங்களை இயக்குவதற்கு அமெரிக்காவும் கியூபாவும் இணங்கி-யுள்ளன. இதற்கான அறிவிப்பானது உடனடியாக விடுக்கப்படும் என பெயர் குறிப்பிட விரும்பாத கியூபாவினதும் அமெரிக்காவினதும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் விமானச் சேவைகள் எப்போது ஆரம்பிக்கும் என்பது தெளிவில்லாமல் உள்ளது.

ஏனெனில் கியூப அரசாங்கத்-துக்கும் அமெரிக்க விமானசேவை நிறுவனங்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளானவை மாதக்கணக்கில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் பனிப்போரில் எதிரிகளாகக் காணப்பட்ட கியூபாவும் அமெரிக்காவும் தமக்கிடையேயான இராஜந்திர உறவுகளை ஆரம்பித்து ஒரு வருடமாகியுள்ள நிலையில், மேற்படி நகர்வானது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமாக காணப்படுகின்றது.

## உயர் நீதிமன்ற நீதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்த பெண்

கனடா



கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் உயர் நீதிமன்ற நீதிபதியாக தமிழகத்தை சேர்ந்த பெண், வள்ளியம்மை நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைக்குடி முன்னாள் தலைவர் அருணாசலம் செட்டியார்- சிகப்பி ஆச்சி ஆகியோரின் மகன் காந்தி அருணாச்சலம் செட்டி-யாரை மணந்துள்ள வள்ளியம்மை வான்கூவர் நகரில் குடியேறியுள்ளார்.

வான்கூவரில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1992ம் ஆண்டு சட்டக்கல்வியை முடித்த அவர், 1995-ம் ஆண்டு முதல் வழக்கறிஞர் பணியை தொடங்கியுள்ளார்.

மேலும், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்-கழகம், சைமன் பிரேசர் பல்கலைக்கழகம், வான்கூவர் கம்யூனிட்டி கல்லூரி உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்களில் சட்டக்கல்வியை பயிற்று-வித்துள்ளார்.

தேசிய கெனடியன் பார் அசோசியேசன் மற்றும் அதனுடைய பிரிட்டி" கொலம்பியா கிளையின் பல்வேறு செயற்குழுக்களில் வள்ளியம்மை [illegible]

## மாணவ குற்றவாளி விடுதலை

இந்தியா

**நிர்பயா** எனப்படும் ஜோதி சிங் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட இளம் குற்றவாளியின் சிறைத் தண்டனை சட்டப்படி முடிந்து விட்டதால் அவரது விடுதலையை தடுக்க முடியாது என்று டெல்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இதனால் அந்தக் குற்றவாளி திட்டமிட்டபடி டிசம்பர் 20ம் திகதி அதாவது நாளை விடுதலை செய்யப்படுகிறார்.

ஜோதி சிங் கடந்த 2012ம் ஆண்டு இரவு மிகக் கொடூரமாக ஆறு பேர் கொண் கும்பலால் டெல்லியில் வைத்து ஓடும் பஸ்சில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

பலாத்காரம் செய்த அந்தக் கும்பல் ஜோதி சிங்கை கொடூரமாக தாக்கவும் செய்தது. அவரது பிறப்புறுப்பில் இரும்புக் குழாயால் தாக்கியதால் அவரது உடல் உள்ளுறுப்புகள் மோசமாக சேதமடைந்தன. இதன் விளைவாக ஜோதி சிங் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் ஒருவருக்கு மட்டும் அப்போது வயது 18. இதனால் இளம் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு சிறார் நீதிமன்றத்தில் அவர் மீதான வழக்கு தனியாக நடத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒட்டகத்திற்கு முத்தமிட்டதால் விவாகரத்து

சவுதி அரேபியாவில் ஒட்டகத்திற்கு முத்தமிட்ட மருமகளை விவாகரத்து செய்யுமாறு தனது மகனுக்கு மாமனார் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

மருமகள் ஒட்டகத்திற்கு முத்தமிட்டதைப் பார்த்த மாமனார், மத மற்றும் சமூக பாரம்பரியத்தை தனது மருமகள் மீறி விட்டதாக கூறி விவாகரத்து செய்யுமாறு தனது மகனிடம் கூறியுள்ளார்.

ஆனால், ஒட்டகம் குட்டி [illegible] பார்த்த மருமகள் ஆசையோடு அதனை முத்தமிட்டு-ள்ளார், மேலும் தனக்கு குழந்தை பிறக்காத காரணத்தால் இவ்வாறு சதிச் செயலில் மாமனார் குடும்பத்தினர் ஈடுபடுகின்றனர், இதனையே சாட்டாக வைத்து எம்மை பிரிக்க பார்க்கின்றனர் என அப்பெண் குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக நடந்து முடிந்த பிரச்சனையின் இறுதியில், கணவர் தனது மனைவியோடு சென்று மாமியார் வீட்டில் வசித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## பாதுகாப்பான ரயில் கடவை க்காக மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி

பாதுகாப்பான ரயில் கடவையை அமைத்து தருமாறு கோரி கிளிநொச்சி ரயில் நிலையத்திற்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில நாட்களில் மாத்திரம் பாதுகாப்பற்ற ரயில் கடவையினால் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுபோன்று மேலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு உரிய பாதுகாப்பு கடவைகளை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாதுகாப்பு கடவைகளை அமைப்பதுடன், கடவைகளில் பாதுகாவலர்களை நியமிக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.



## நொதேர்ண் பவர் இயங்க முயற்சி சுன்னாகம் குடிநீர் விவகாரம்

வலிகாமம்



சுன்னாகத்து நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு இல்லையென்று கூறும் நிபுணர் குழுவின் அறிக்கையானது சர்ச்சைக்குரிய நோர்தன் பவர் நிறுவனத்தை குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க வைப்பதற்கான முயற்சியாகத் தோன்றுகின்றதென வடமாகாண-சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் காட்டி நொர்தன் பவர் நிறுவனம் தங்கள் மீது நீதிமன்றத்தில் உள்ள தடையை நீக்கி மீண்டும் இயங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வலிகாமம் பகுதியில் உள்ள கிணறுகளில் எண்ணெய் கசிவு ஏற்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முழுமையான அறிக்கையானது நிபுணர் குழுவினால் முழுமையாக வெளியிடப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் ஏன் முடியாது

### டக்ளஸ் தேவானந்தா



அத்துமீறியும், தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைக் கொண்டும் சிலாபம் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த கற்பிட்டி கடற்றொழிலாளர்களை கைதுசெய்ய முடியுமென்றால், வடக்கில் அத்துமீறியும், தடைசெய்யப்பட்ட உபகரணங்களைக் கொண்டும் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற வெளிமாவட்ட கடற்றொழிலாளர்களை ஏன் கைதுசெய்து, அவர்களது செயற்பாடுகளைத் தடுக்க முடியாது" என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

## சும்மா இருக்கும் இராணுவம் துப்புரவு செய்யலாமே

திருக்கேதீஸ்வரம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆலோசனை



மூடப்பட்டுள்ள வடிகால்களினை சும்மா இருக்கும் இராணுவத்தைக் கொண்டே திறந்து விடவும் மற்றும் துப்புரவு செய்-யவும் வைக்கலாமே என வடக்கு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற போது வடிகால்களின் ஊடாக புலிகள் வருகின்றார்கள் என கூறி இராணுவம் அவற்றை மூடிவிட்டதாக கூறப்பட்டது. இப்போதும் அவை அடைபட்டிருப்பதால் வெள்ளம் வருவதாகக் குற்றஞ் சொல்லப்படுகின்றது. இது தொடர்பில் மூடப்பட்டவற்றினை இங்கு சும்மா இருக்கும் இராணுவத்தைக் கொண்டே திறந்து விடவும் துப்புரவு செய்யவும் வடக்கு முதலமைச்சர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கில் காணி அபகரிப்பு தொடர்ந்து இருப்பதற்கு காரணம் இங்கு இராணுவம் இருப்பது தான். இந்த அரசாங்கம் நாங்கள் வாக்களித்துத் தான் ஆட்சிக்கு வந்தது. அவர்களுடன் சேர்ந்து செயற்படுவதற்கு முன் அரசிற்கு மனமாற்றம் உள்ளதா என்பது சந்தேகமாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குடிநீர் பிரச்சினை தொடர்பிலான சந்திப்பு

சர்ச்சைக்குரிய சுன்னாக குடிநீர் தொடர்பிலான விசேட திரைப்படக் காட்சி மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இன்று 19.12.2015 யாழ். திருமறைக் கலாமன்ற மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் மாசடைதலில் விஞ்ஞானம், அரசியல், சூழ்ச்சிகள் எனும் பெயரினில் சமுதாய வைத்திய நிபுணரது உரையும் நிகழ்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சுன்னாகம் நீர் மாசடைதலை ஒத்த அமெரிக்க திரைப்படமான ஏரின் புரோகோவிச் அன்றைய தினம் திரையிடப்படவுள்ளது. இதற்கான அனுசரணையை யாழ் மாவட்ட ஊடக அமையம் வழங்கவுள்ளது.

## அரசியல் கைதிகள் விவகாரம் குறித்த பேச்சுவார்த்தை

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் நேற்று முக்கிய பேச்சு இடம்பெற்றதாக தெரிய வருகின்றது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 17 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்யவுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை காவல்துறை தம்மிடம் பெற்றுக்கொண்ட ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பயன்படுத்தி இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளதை கண்டித்து கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகள் இருவர் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றைய கூட்டத்தை காரணங்காட்டி நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் முன்னெடுக்கப்பட்ட நாடளாவிய ரீதியிலான சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஜனாதிபதியின் வாக்குறுதியை நம்பி கைவிடப்பட்டிருந்தது. இதனையடுத்து சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சியவர்கள் தொடர்பிலான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படாதமை பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

## குடிநீர் பிரச்சினை தொடர்பிலான சந்திப்பு

வட மாகாணம்



வடமாகாணத்தில் மணல் அகழப்படும் வடமராட்சி கிழக்கு மற்றும் பூநகரி ஆகிய பிரதேசங்களில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் அவை கைவிடப்பட்ட பிரதேசங்களாகக் காணப்படுவதாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் 2016ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் கடந்த வியாழக்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையில் நடைபெற்ற போது, அவர் மேற்கண்டவாறு கூறினார். "மணல் அகழும் பிரதேசங்களில் மணல் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானங்களை அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

பனை வளம் பாதுகாக்கப்பட்டு, இங்கிருந்து பனை உற்பத்திகளை தென்னிலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், மருதங்கேணியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்..

## 20 வருடங்களாக என்ன செய்தீர்கள்?

யாழ்ப்பாணம் யாழ்.குடாநாட்டில் கடந்த 1995ம், 1996ம் ஆண்டு காலப்பகுதியில் தனது சகோதரன் காணாமல்போன நிலையில் மனம் உடைந்துபோன நபர் ஒருவர் நேற்றைய தினம் வடமாகாண சபைக்குள் நுழைந்து மாகாணசபை தமக்கு என்ன செய்தது? 20 வருடங்களாக அலைந்து திரியும் எமக்காக என்ன பேசினீர்கள்? என கண்ணீர்மல்க கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

மாகாணசபையில் 2016ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நடைபெற்றிருந்த போது மதிய உணவுக்கான இடைவேளையின்போது குறித்த நபர் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள்? எங்களுடைய குடும்பங்கள் சாப்பாட்டுக்கும் வறுமைப்பட்ட நிலையில், அரச திணைக்களங்களில் மரியாதையாக நடத்தப்படாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என முரண்பட்டுக் கொண்டிருந்தார்.





இந் நிலையில் குறித்த நபரை ஆற்றுப்படுத்திய உறுப்பினர்கள் 20ம் திகதி ஜனாபதிபதி வரும்போது இந்த விடயம் தொடர்பாக பேசுங்கள் நாங்களும் வருகிறோம் என தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறையில் வாடும் எம் தவமே!




அன்று தாயின் கருவில் உருவாகி
உடல் உதிரமதில் வளர் தளிராகி
வெளி ஒலிதனில் உணர்வாகி
பத்து மாதமதில் முழு நிறைவாகி

வந்தாயே குழந்தை எனும் புனிதமாகி
கவம் கிடந்த எம் துயர் தீர்த்தாய் வரமாகி
பயின்றாயே பல துறைகளில் தெரிவாகி
உன் வளர்ப்பில் நாம் பெரும் மகிழ்வாகி

புகழ் சேர்க்கும் சான்றிதழ்களுடன் வெளியாகி
தப்பே தெரியாத என் வீட்டின் சொத்தாகி
எம் உளம் மகிழ பெயர் பெற்ற பொழுதாகி
நீ பெற்ற திறன் தமிழ்த்தாய் மொழியாகி

துயர் துடைக்க நீ சென்றாய் பணியாகி
நாம் அறிந்தோம்
சிறைதனில் வாடும் நிலையாகி
உன் உறவுகளின் பிரிவுக்கு அறியாத தருவாகி (தருணமாகி)

இளம் வாழ்நாளை பறித்தனரோ வெறியாகி
நெஞ்சம் கொதிக்கிறதே நாளும் நெருப்பாகி
நாம் காத்திருந்த தீபாவளியும் கடந்ததாகி
எப்போ நீ வருவாய் எம் பழைய உறவாகி




## விதியும் + விளைவும்

காதலால் வருவது உறவு
சாதலால் நேர்வது பிரிவு:
மோதலால் கிடைப்பது இழப்பு
ஈதலால் பெறுவதுமகிழ்வு!

கல்வியால் வருவது சிறப்பு
கவிதையால் வருவது களிப்பு:
பல்லவி அனுபல்லவி சரணம்
பாடல் தருமின்ப மகிழ்ச்சி!

ஆன்மீகம் தரும் நல்லொழுக்கம்
ஆடம்பரம் அமைதி கெடுக்கும்:
தேன் போல தமிழ் இனிக்கும்
திருவாசகம் மனதை உருக்கும்!

காமமும் மோகமும் கசக்கும்
காதலொன்றேதான் இனிக்கும்:
தேமதுரத் தமிழ் ஓசை
தேசமெங்கும் ஒலிக்க வேண்டும்!

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே
வாழ்வும் தாழ்வும் மனிதனுக்கே:
மரணமும் பிறப்பும் விதிப்படியே
மண்ணில் நடக்கும் உண்மையிதே!

கலாபூசணம் சிவஸ்ரீ அ. அரசரெத்தினம்
சேனையூர்

# தவி முரசு

## தவிக்கின்றேன் உன்னாலே....



பள்ளி நாட்களில்
உன்னை பார்த்த முதல் நாளை
எண்ணி எண்ணி
தவித்துக் கொண்டிருக்கின்றேன் நான்....

நிமிடங்கள் ஒவ்வொன்றும்
வருடங்களாகின்றன என்ற
பாடல் வரி தான் என் நெஞ்சில்
புழுவாய் இன்றும் அரித்துக்
கொண்டிருக்கின்றன....

நிம்மதியான நித்திரை கொள்ள
சென்று விட்டாயோ நீ
உன்னை எண்ணி தினம் தினம்
உருகி கொண்டிருக்கின்றேன் நான்....

சுட்டெரிக்கும் சூரியனைப் போல் என்
பக்கம் உள்ளவர்களை எரித்துக்
கொண்டிருக்கின்றேன் நான் - என் மீது
அன்பு காட்ட வந்தவர்களையும்
அடியோடு வெறுத்துக் கொண்டிருக்கின்றேன்
நான்....

இவை எல்லாம் உன்
நினைவுகளால் தான் தினந்தோறும்
தவித்துக் கொண்டிருக்கின்றேன் நான்....

வ. மேனுகா
வரோதய நகர்

## உகந்ததே!


குமரிக் கண்ட மாந்தரின்
குறைகள் அற்ற வாழ்வினை
எமது தமிழின் உச்சியில்
இருந்த "வாணர்" உரைத்துள்ளார்!

ஆசிரியர்கள் வருமுனம்
அருமை வாழ்வு வாழ்ந்தவர்!
பேருரைக்கில் திராவிடர்,
பேறு பெற்ற வாழ்வினர்!

இதனைத் தாங்கொணாமலே
இரைந்து பார்த்த ஆழியாள்,
அதனை முற்றும் அழித்ததும்
அறிந்து விட்டுப் போகிறேன்!

என தினத்தின் தொடக்கமும்,
இடையின் தொற்று நோய்களும்
எனது மூளை அறிவ தென்
எழுத்திற்குகந்த தாகுமே!

"தாமரைத்தீவான்"
(ஈச்சந்தீவு - கிண்ணியா)




# இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)




எனினும் இது பலமான அதிகாரம் மிக்க சதுர்வேதி மங்கலமாக சோழர் காலத்தில் உருவெடுப்பதற்கு திருகோணமலைத் துறைமுகம், திருக்கோணேஸ்வரம் என்பன முதன்மையான வகிபாகத்தைக் கொண்டிருந்தது.

பண்டைய காலம் முதல் திருகோணமலையில் இருந்த சுதேச மக்களுக்கு மேலதிகமாக தென்னிந்தியாவில் இருந்து குடியேற்றங்கள் நிகழ திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவமும், திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் புகழும் காரணமாக அமைந்தது எனலாம். வரலாறு நெடுகிலும் இலங்கையின் மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படையெடுப்புக்களின் போது புதிய குடியேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவ்வாறு குடியேறியவர்கள் போர் வீரர்களாக, கலைஞர்களாக, பிராமணர்களாக, வணிகர்களாக இருந்திருக்கின்றார்கள்.

போர்க்காரணங்களுக்கு அப்பால் திருக்கோணேஸ்வர ஆலய அறப்பணித்தேவை-களுக்காகவும் குடியேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. பல்லவர் காலத்தில் திருக்கோணேஸ்வரத்தின் புகழ் தென்னிந்தியாவில் கணிசமான அளவு பரவி இருந்ததை காணக்கூடியதாக இருக்கின்றது. கி.பி.7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் "குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமாமலையமந்தாரே" எனப் பதிவு செய்கின்றார். அக்காலப் பகுதியில் தமிழ் நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையில் நெருங்கிய பண்பாட்டுத் தொடர்புகளும் ஏற்பட்டிருந்தது. இதனால் தென்னிந்திய மக்களின் குறிப்பிடத்தக்களவு கவனத்தை ஈர்த்திருந்த திருக்கோணேஸ்வரம் அமைந்-திருந்த திருகோணமலை நோக்கி குடிப்பெயர்வுகள் நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.



சோழர் காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தினைச் சேர்ந்த போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியர் குவைறோஸ் அடிகளார் இவ்வாலய சிறப்பினை இவ்வாறு சொல்கிறார். திருகோணமலைத் துறைமுகத்தின் தரைப்பகுதியில் இருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையில் மூன்று கோவில்கள் உள்ளது. அவற்றில் கடலுக்குள் நீண்டிருக்கும் 400 அடி உயரமான மலையில் இருக்கும் கோணேசர் ஆலயமே மிகப்பிரபல்யமான ஆலயமாகும். கீழைத்தேசத்தவரின் ரோமாபுரியாக இக் கோணேசர் கோவில் விளங்குகின்றது. இராமேஸ்வரத்திற்கும், பூரிஜெந்நாத் ஆலயத்திற்கும் வழி[illegible]களைக் கா[illegible] அதிகமான பக்தர்கள் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருகிறார்கள். இந்த விபரிப்பு தொடர்ச்சியாக திருக்கோணேஸ்வரர் ஆலயம் கொண்டிருந்த முக்கியத்துவத்தினை விளக்குவதாக உள்ளது. மேற்கூறிய காரணங்களா-ல்வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் திருகோணமலையில் வாழ்ந்து வந்த சுதேச பிராமணர்களின் குடித் தொகை படையெடுப்பு, பண்பாட்டுத் தொடர்பு -களால் கணிசமான அளவில் அதிகரித்து இருக்குமென ஊகிக்க முடிகிறது. இதுவே சோழர் காலத்தில் இங்கு சதுர்வேதி மங்கலம் உருவாக வழிசமைத்திருக்கலாம்.

இலங்கையில் பிராமணர் தொடர்புடைய முக்கி தகவல் -களைத் தருவது குகைக் கல் வெட்டுக்களாகும். இவை கிறிஸ்த்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைச் சேர்ந்தவை. இவை குகைகளுடன் தொடர்புடைய பிராமியில் அமைந்த சாசனங்களாகும்.

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

தொடரும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியிலிருந்து ஊற்றெடுக்காத நல்லிணக்கம்

நிலாந்தன்
www.tamilkingdom.org

கடந்த மாதம் கொழும்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை வெளியுறவு அமைச்சர் சந்தித்தார். இதன் போது அவர் ஒரு தகவலைத் தெரிவித்தார். இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளுக்காக ஏறக்குறைய 450 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளதாம்.

இதைப் போலவே அண்மையில் தென்னாபிரிக்காவில் நிகழ்ந்த ஒரு சந்திப்பின் போது ஜஸ்மின் சூக்கா இதையொத்த மற்றொரு தகவலை வெளியிட்டிருக்கிறார். தென்னாபிரிக்கா, சியாரா லியோன், கம்பூச்சியா போன்ற உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் கணிக்குமிடத்து இலங்கைத்தீவின் நிலைமாறு காலகட்டத்திற்குரிய நீதியை ஸ்தாபிக்கும் பணிகளுக்கு ஏறக்குறைய 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படலாம் என்று.

அதே சமயம் இலங்கைத் தீவானது ஏனைய நாடுகளின் மாதிரிகளை அப்படியே பின்பற்றாமல் தனக்கேயான கள யதார்த்தத்தின்படி நிலைமாறு கால கட்டத்திற்குரிய நீதியை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அண்மை மாதங்களில் தமிழ்ப் பகுதிகளில் அடிமட்டச் சிவில் அமைப்புக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிகழ்ச்சித் திட்டங்களின்படி நல்லிணக்கம், தேசியக் கலந்துரையாடல் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் சிவில் சமூகங்களின் பங்களிப்பு போன்ற இன்னோரன்ன தலைப்புக்களின் கீழ் தொடர்ச்சியாக சந்திப்புக்களும் கருத்தரங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் பிரித்தானிய கொன்சவேர்ற்றிவ் கட்சியின் பிரமுகர் ஒருவர் புலம்பெயர்ந்த தமிழர் ஒருவரோடு உரையாடியபோது ஒரு தகவலைத் தெரிவித்துள்ளார். அதன்படி கொழும்பில் இருந்து வெளிவரும் இரண்டு இணையங்களுக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகைக்கும் நிதி உதவிகள் செய்யப்படுவதாக ஊகிக்க முடிகிறது.

இதற்கென்று பெருந்தொகைப் பணம் இச்சிறு தீவை நோக்கித் திருப்பிவிடப்பட்டுள்ளது. அரபு வசந்தங்களுக்காக மேற்கு நாடுகள் செலவழித்த பணத்தில் பெரும்தொகுதி வெடி மருந்துகளுக்கே செலவாகியது. இவ்வாறு அரபு நாடுகளில் கரியாகும் காசோடு ஒப்பிடுகையில் இலங்கைத்தீவின் வசந்தத்திற்காக தாங்கள் முதலீடு செய்யும் டொலர்கள் அனைத்தும் வீணாகப் போவதில்லை என்று சக்திமிக்க நாடுகள் சிந்திக்கக் கூடும்.

எனவே புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்பட்ட பின் இலங்கைத் தீவுக்குள் பெருமளவு நிதி பாய்ச்சப்படுகிறது. இது ஏற்கனவே ஜனவரியில் நிகழ்ந்த ஆட்சிமாற்றத்தின் பின் தொடங்கிவிட்டது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகளுக்கு ஐ.நா. நிதி அனுசரணை புரியும் என்ற தகவல் ஆட்சி மாற்றத்தை அடுத்து வெளியாகி இருந்தது. இவ்வாறு பெருமளவு நிதியைக் கொட்டி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான கலந்துரையாடல், நிலைமாறு காலகட்ட நீதியை உருவாக்குதல் போன்ற கவர்ச்சியான தலைப்புக்களை வைக்கக் கூடும்.

ஆனால் இச்செயற்பாடுகளின் உள்நோக்கத்தைக் கருதி இவை அனைத்தையும் ஒரு பொதுத் தலைப்பின் கீழ் கொண்டு வந்துவிடலாம். அதாவது ஆட்சி மாற்றத்தைப் பலப்படுத்துவது. மாற்றத்தை எப்படிப் பலப்படுத்துவது? பிரதானமாக அது மூன்று முனைகளில் முன்னெடுக்கப்படுகின்றது.

முதலாவது, புதிய அரசாங்கத்தைத் தத்தெடுப்பது.

இரண்டாவது, ராஜபக்ச சகோதரர்கள் உட்பட சிங்கள தரப்பில் இருக்கக் கூடிய கடும் போக்காளர்களையும், தமிழ் தரப்பில் இருக்கக் கூடிய இலட்சியப்பற்றுறுதி மிக்க சக்திகளையும் தலையெடுக்க விடாமல் தடுப்பது.

மூன்றாவது, அடிமட்டச் சிவில் அமைப்புக்களின் மத்தியில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் சந்திப்புக்களையும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடாத்துவது.

புதிய அரசாங்கத்தை மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஏற்கனவே தத்தெடுத்துவிட்டன. இந்தியப் பிரதமர் மோடி யாழ்ப்பாணத்தில் பால்ப்பொங்கல் பொங்கியது, சமந்தா பவர் ஒஸ்மானியாக் கல்லூரியில் எல்லே விளையாடியது போன்ற எல்லாவற்றுக்கூடாகவும் சக்திமிக்க நாடுகள் இச்சிறு தீவுடனான தமது ஐக்கியத்தை வெளிக்காட்ட விளைகின்றன. இதன் மூலம் இச்சிறிய தீவானது ஒரு புறம் மேற்குமயப்படுகிறது என்றும் இன்னொரு புறம் இந்திய மயப்படுகிறது என்றும் சில விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் இந்தியத் துணைத் தூதுவர் ஏறக்குறைய ஒரு சமூகப் பிரமுகர் ஆகிவிட்டார். சமய நிகழ்ச்சிகள், ஆன்மீக நிகழ்ச்சிகள், கலை,பண்பாட்டு நிகழ்ச்சிகள், காந்தி ஜெயந்தி, மற்றும் அரசியல் நிகழ்ச்சிகள் போன்ற இன்னோரென்ன நிகழ்ச்சிகளுக்கு அவர் சமூகப் பெரியாராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். இலங்கைத் தீவில் உள்ள எந்த ஒரு வெளிநாட்டுத் தூதருக்கும் கிடைத்திராத கௌரவம் அது.

இப்படியாக ஆட்சிமாற்றத்தின் பின்னிருந்து தொடங்கி இச்சிறிய தீவானது மேற்கத்தேய தரப்புக்களுக்கும் பிராந்திய தரப்புக்களுக்கும் முழுமையாகத் திறக்கப்பட்டுவிட்டது என்றே தோன்றுகின்றது. ஆட்சிமாற்றத்திற்கு முன்புவரை ராஜபக்ச அரசாங்கமானது எந்தளவுக்கு அனைத்துலக சமூகத்தால் அசூசையோடு பார்க்கப்பட்டதோ அதேயளவுக்கு ரணில் - மைத்திரி அரசாங்கமானது அனைத்துலக கவர்ச்சிமிக்கதாக மாறியிருக்கிறது.

இந்த மாற்றத்தைத்தான் அவர்கள் நிலைமாறு காலகட்டம் என்று கூறுகிறார்கள். இந்த நிலைமாறு காலகட்டத்திற்குரிய நீதியே தமிழ் மக்களுக்குரிய நீதியும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இரண்டாவது- சிங்கள மற்றும் தமிழ் தரப்புக்களில் காணப்படும் தீவிர நிலைப்பாடுள்ள சக்திகளை தலையெடுக்கவிடாமல் தடுப்பது. நடந்து முடிந்த பொதுத்தேர்தல் முடிவுகள் இதற்குரிய வழிகளை இலகுவாக்கி கொடுத்திருக்கின்றன. ராஜபக்ச சகோதரர்கள் போர்க்குற்றம் தவிர மற்றெல்லாக் குற்றச் சாட்டுக்களினாலும் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழ்தரப்பில் தமிழ் தேசியத்தின் கூர்முனை போலக் காணப்படும் தமிழ் டயஸ்போறாவை எப்படி வெட்டியாழலாம் என்று மேற்கத்தேய அரசாங்கங்கள் சிந்திக்கக் கூடும்.

அண்மையில் சில அமைப்புக்களின் மீதான தடைகள் நீக்கப்பட்டன. இதன் மூலம் தமிழ் டயஸ்போறா மேலும் பிளவுபடக் கூடும். தடை நீக்கப்பட்ட அமைப்புக்கள் யாவும் துரோகிகளாக முத்திரை குத்தப்படும். தடை நீக்கப்படாதவை மெய்யான தேசிய சக்திகளாக முத்திரை குத்தப்படும். எப்படி அரசியல் கைதிகளின் விவகாரத்தில் பிணை வழங்கும் பொழுது கைதிகளை வகைப்படுத்தியதன் மூலம் அவர்களை பிரித்தாழ முடிந்ததோ அதேபோல புலம்பெயர்ந்த அமைப்புக்களில் சிலவற்றின் மீதான தடைகளை நீக்குவதன் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் பிளவுகளை ஊக்குவிக்கலாம்.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே இடைமாறு காலகட்டத்திற்குரிய நீதியை ஸ்தாபிப்பது தொடர்பாகவும் நல்லிணக்கம் தொடர்பாகவும், இனங்களுக்கிடையிலான கலந்துரையாடல் தொடர்பாகவும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு அதிகரித்த அளவில் கலந்துரையாடப்படும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. இந்த உரையாடல்களின் போது போர் இல்லாத வாழ்க்கை என்பது அதிகம் முக்கியத்துவம் மிக்கதாகக் காட்டப்படுகிறது. இதன் மூலம் போர்தான் ஒரு பிரச்சினை என்பதாகவும் காட்டப்படுகிறது.

சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்சதான் எல்லாத் தீமைகளுக்கும் காரணம் என்று காட்டப்படுகிறது. அமைச்சர் மனோகணேசன் கிளிநொச்சியில் வைத்துக் கூறுகிறார். "இப்பொழுது சிங்களப் பயங்கரவாதமும் இல்லை. தமிழ் பயங்கரவாதமும் இல்லை" என்று. ஆயின் இலங்கைத்தீவின் பிரச்சினை எனப்படுவது போரும் அந்தப் போரை வெற்றிகொண்ட ராஜபக்ச அரசாங்கமும் மட்டும்தானா? நிச்சயமாக இல்லை.

போர் ஒரு காரணம் அல்ல. விளைவுதான். ஆயுதப் போராட்டம் ஒரு காரணம் அல்ல. ஒரு விளைவுதான். பிரபாகரனோ அல்லது விடுதலைப் புலிகள் இயக்கமோ விளைவுகள்தான். ராஜபக்சவும் மைத்திரியும் கூட விளைவுகள்தான். இப்போதிருக்கும் ரணில் மைத்திரி அரசாங்கமும் ஒரு விளைவுதான். கூட்டமைப்பு எதிர்க்கட்சி ஆகியதும் கூட ஒரு விளைவுதான். ஆயின் காரணம் எது?

சிங்கள பௌத்த மேலாண்மை வாதம்தான் மூலகாரணம். அந்த மேலாண்மை வாதத்தை அடிச்சட்டமாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டிருக்கும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புத்தான் மூலகாரணம். அதன் விளைவே இனப்பிரச்சினை. இனப்பிரச்சினையின் விளைவுகளே மேற்கண்ட எல்லாமும். ராஜபக்ச சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்தை அதன் உச்சக்கட்டத்திற்குக் கொண்டு போனார். அவரும் அதன் கருவிதான். ரணிலும் மைத்திரியும் கூட அந்த அரசுக் கட்டமைப்பின் கைதிகள் தான்.

எனவே மூலகாரணம் அப்படியே இருக்கத் தக்கதாக விளைவுகளை மூலகாரணமாக மாறாட்டம் செய்யும் ஓர் அரசியல் சூழலைத்தான் உலகச் சமூகம் நிலைமாறு காலகட்டம் என்று அழைக்கின்றதா? இக்கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்டதைப் போல ஜஸ்மின் சூக்கா கூறும் இலங்கைத் தீவிற்கேயான கள யதார்த்தம் எது? இது தொடர்பாக அதாவது நிலைமாறு காலகட்டத்துக்குரிய நீதி தொடர்பாக தமிழ் சிவில் சமூகங்களின் அமையம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆட்சி மாற்றத்தின் பின்னரான இலங்கைத் தீவின் காலகட்டத்தை நிலைமாறு காலகட்டம் என்று அழைக்கமுடியுமா என்ற கேள்வி இங்கு முக்கியமானது.

நிலைமாறு காலகட்டத்திற்குரிய நீதி என்ற சொற்றொடர். கொடுங்கோன்மை, போர், வன்முறை, சர்வாதிகாரம் அல்லது ஏதேச்சாதிகாரம் போன்றவற்றிலிருந்து இயல்பு வாழ்க்கை, அரசியல்ஸ்திரம், ஜனநாயகம் போன்றவற்றை நோக்கித் திரும்பிய நாடுகளின் விடயத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. அதன்படி சர்வாதிகாரம் அல்லது ஏதேச்சாதிகாரம் அல்லது கொடுங்கோன்மை, போர், வன்முறை போன்றவற்றிலிருந்து நல்லிணக்கம், சமூகஸ்திரம், ஜனநாயகம் போன்றவற்றை நோக்கிச் செல்லும் இடைப்பட்ட காலகட்டமே நிலைமாறு காலகட்டம் என்று அழைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் முன்னைய கொடுங்கோண்மை ஆட்சியின்போது இழைக்கப்பட்ட அக்கிரமங்களுக்கு உரிய நீதியை, இழப்பீட்டை பெற்றுக்கொடுக்கும் ஒரு செயற்பாடே நிலைமாறு கால கட்டத்திற்குரிய நீதி என்று அழைக்கப்படுகிறது. கெடுபிடிப்போருக்குப் பின்னரான உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் நிலைமாறு காலகட்டத்துக்குரிய நீதி எனப்படுவது உண்மையைக் கண்டறியும் பொறிமுறை, போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக் கூறல், நல்லிணக்க முன்னெடுப்புக்கள் போன்றவற்றுக்கு அதிகரித்த முக்கியத்துவம் கொடுப்பதாக விரிவாக்கம் பெற்றிருக்கிறது.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் இலங்கைத்தீவில் இப்பொழுது இருப்பது ஒரு நிலைமாறு காலகட்டமா? நிச்சயமாக இல்லை. எது மூலகாரணமோ அது மாறவே இல்லை. பதிலாக அந்த மூலகாரணத்தின் கைதிகளாகக் காணப்படும் அரசாங்கங்கள்தான் மாறியிருக்கின்றன. அதாவது விளைவுகளின் மாற்றம். இது விடயத்தில் தமிழ் சிவில் சமூக அமையத்தைச் சேர்ந்த ஒரு மருத்துவர் சுட்டிக்காட்டுவது போல மகிந்த ராஜபக்சவை ஒரு அளவுகோலாக வைத்துக்கொண்டு மாற்றத்தையும் இனப்பிரச்சினையையும் அளக்க முடியாது என்பதே சரி.

அனைத்துலகக் கவர்ச்சியற்ற சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்திலிருந்து அனைத்துலகக் கவர்ச்சி மிக்க சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்திடம் ஆட்சி கைமாறியிருப்பதை நிலைமாறு காலகட்டம் என்று அழைக்கலாமா? தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிங்கள பௌத்த மேலான்மைவாத கருத்து நிலையில் பண்புமாற்றம் ஏற்படும் போதே அதை மாற்றம் என்று அழைக்கமுடியும். அதல்லாத வேறெந்த மாற்றமும் மேலிருந்து கீழ் நோக்கித் திணிக்கப்படும் மேலோட்டமான மாற்றங்களே. கீழிருந்து மேல் நோக்கி உருவாக்கப்படும் அடிப்படை மாற்றங்களாக இருக்கப் போவதில்லை.

இதற்கு இரண்டு கூர்மையான உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். முதலாவது யாழ்ப்பாணத்துக்கு வந்து போகும் சிங்கள உல்லாசப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்கள் பற்றியது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் வருகிறார்கள் போகிறார்கள். முதலில் அவர்கள் ஆரிய குளம் சந்தியில் உள்ள நாகவிகாரைக்குப் போகிறார்கள். அதன் பின் அவர்கள் நைனாதீவுக்குப் போகிறார்கள். அதன் பின் கந்தரோடைக்குப் போகிறார்கள் அல்லது காரைநகருக்குப் போகிறார்கள். நல்லூருக்கும் போகிறார்கள். அப்படிப் போகும் போது அருகேயுள்ள றியோ குளிர்பான நிலையத்தில் றோல்ஸ் சாப்பிடுகிறார்கள். வசதியானவர்கள் அநேகமாக காங்கேசன் துறையில் படையினரால் நடாத்தப்படும் விடுதியில் தங்குகிறார்கள்.

இவ்வாறு கடந்த ஆறே முக்கால் ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு பௌர்ணமிக்கும் ஏனைய விடுமுறை நாட்களுக்கும் வடக்குக்கு வரும் சிங்கள மக்கள் வடக்கில் உள்ள சாதாரண தமிழ் மக்களோடு எவ்வளவு தூரம் நெருங்கிப் பழகுகிறார்கள்?. அவர்கள் வடக்கில் தங்கியிருக்கும் குறுகிய காலப்பகுதிக்குள் இங்குள்ள தமிழர்களோடு எந்தளவுக்கு இடையூடாடுகிறார்கள்?. இது தொடர்பாக இவ்வாண்டின் தொடக்கத்தில் கொழும்பில் உள்ள ஐரோப்பிய நாடொன்றின் தூதுவரோடு உரையாடியபோது அவர் சிரித்துக்கொண்டே கேட்டார் யாழ்ப்பாணத்துக்கு வரும் சிங்கள மக்கள் றியோ குளிர்பான நிலையத்தில் றோல்ஸ் சாப்பிடுகிறார்கள்தானே என்று.

அவரிடம் நான் சிரித்துக் கொண்டு கேட்டேன் அப்படி என்றால் அந்த றோல்ஸ்களில் இருந்து நல்லிணக்கத்தை தொடங்கலாமா? என்று. அடுத்த உதாரணம். வடக்கில் மீளக்குடியேறிய முஸ்லிம்கள் தொடர்பானது. கடந்த ஆறேமுக்கால் ஆண்டுகாலப் பகுதிக்குள் யாழ். நகரப் பகுதியில் புடவை வியாபாரத்திலும், அசைவ உணவு வியாபாரத்திலும் முஸ்லிம்கள் முன்னிலை வகிக்கத் தொடங்கிவிட்டார்கள். கடந்த தீபாவளிக்கு முதல் நாள் இரவு 8.00 மணியளவில் யாழ். நகரப்பகுதியில் இருக்கும் முன்னணி தமிழ் புடவைக் கடைகள் பல மூடப்பட்டுவிட்டன.

ஆனால் பெரும்பாலான முஸ்லிம் கடைகளில் அப்பொழுதும் வியாபாரம் அமோகமாக நடந்துகொண்டிருந்தது. முஸ்லிம்கள் மீளக்குடியேறி பல ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு எந்தளவிற்கு நெருக்கமாக வந்திருக்கிறது.? கடைகளில் விற்போர் வாங்குவோர் என்ற வர்த்தக உறவுக்கும் அப்பால் நல்லிணக்கத்துக்குரிய ஜீவனுள்ள உறவாக அது வளர்ச்சியடைந்துள்ளதா? சமந்தா பவர் ஒஸ்மானியாக் கல்லூரியில் மழையில் நனைந்து நனைந்து எல்லே விளையாடினர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் எத்தனை விளையாட்டுக் கழகங்கள் அந்த மைதானத்தில் நல்லிணக்கப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கின்றன? மேற்கண்ட இரண்டு கசப்பான உதாரணங்களுக்கூடாகவும் வெளிவரும் உண்மை எது? நல்லிணக்கத்தைப் பற்றிய மேற்கத்தேய வாசிப்புக்களில் "பிளவுபட்ட இறந்தகாலத்தில் இருந்து பகிரப்படும் எதிர்காலத்தை நோக்கி" என்று கூறப்படுவது உண்டு. ஆனால் கடந்த ஆறே முக்கால் ஆண்டுகால இலங்கைத்தீவின் அரசியல் யதார்த்தம் அத்தகையதா? அதை மேற்கத்தேய வாசிப்புக்களுக்கூடாக நிலைமாறு காலகட்டம் என்று அழைக்கலாமா? அதற்குகூடாக ஸ்தாபிக்கப்படும் நீதி தமிழ் மக்களின் கூட்டுக் காயங்களை சுகப்படுத்த வல்லதாக அமையுமா? அல்லது அனைத்துலக கவர்ச்சிமிக்க சிங்கள பௌத்த மேலாதிக்கவாதம் தமிழ் மக்களை மீண்டுமொருமுறை தோற்கடித்துவிடுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 84

# சொந்தக் காலில் நிற்றல்

(வி. என். சந்திரகாந்தி)



ஒரு பசுக்கன்றானது தான் இம் மண்ணில் வாழ்வதற்காய் பிரசவிக்கப்பட்டிருப்பதை அறிவு பூர்வமாக உணரும் முதற்கணமே அது செய்யும் முதற் காரியம் எழுந்து தனது சொந்தக்காலில் நிற்பதுதான்! அடுத்து எந்தவித முன் அனுபவமோ அறிவோ இன்றியும் எவரது தூண்டுதலின்றியும் தாய் மடியை தேடி அறிந்து கொண்டு தனது பசியை போக்குகின்றது! அது ஐந்தறிவு படைத்த ஜீவனாகும். ஆறறிவு படைத்த ஜீவனுக்கு தாய் தனது மடியில் வைத்து பால் புகட்ட வேண்டியுள்ளது.

பசுக்கன்று இங்கு உதாரணத்துக்காகவே எடுத்துக்கொள்ளப்பட்டது. காட்டில் பிரசவிக்கப்படும் ஜீவன்கள் ஒவ்வொன்றுமே சிறிது கால அவகாசத்திலேயே எழுந்து நிற்பது மட்டுமன்றி தனது பசியை போக்கிக்கொண்டு தனது தாயையும் கூட்டத்தையும் தொடர்ந்து செல்ல வேண்டும். இல்லாவிட்டால் பகை பிராணிகளிடமிருந்து தாயும் சேயும் தப்ப முடியாது, இரையாக வேண்டியதே.

இறைவன் இயற்கையின் வாயிலாக மனிதனுக்கு பல செய்திகளை பகிர்ந்துள்ளான். அதை சரியாக புரிந்து கொள்வதில் தான் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட உதாரணம் இரண்டு தகவல்களை எமக்கு தெரிவிக்கின்றது. ஒன்று எமது பாதுகாப்பு நாம் சொந்த காலில் நிற்பதிலேயே தங்கியுள்ளது. இரண்டாவது எமது வாழ்க்கைக்கான ஜீவனோபாயத்தை நாமே தெரிந்து கொண்டு அடியெடுத்து வைக்கவேண்டும்.

எமது நாட்டில் சில வருடங்களுக்கு முன்பு வரை யுத்தம் நிமித்தமான அசாதாரண நிலைமை ஒன்று மூன்று தசாப்தங்களாக நீடித்தது. எமது மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்ததுடன், இடம் பெயரவும் நேரிட்டது. உயிரிழப்புக்கள் ஏற்பட்டது. பலர் அவயவங்களை இழந்தார்கள். பலர் பெற்றோர், சகோதரங்கள், கணவன், மனைவி என்ற உறவுகளை இழக்க நேரிட்டது. குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாத்துக்கொண்டிருந்த உயிர்கள் பறிக்கப்பட்டன. அல்லது சிறையில் அடைக்கப்பட்டன. வன்னியில் சொந்த நிலப்பரப்பில் விவசாயம், பயிர்செய்கை, கால்நடைவளர்ப்பு ஆகிய முயற்சிகளின் மூலம் சொந்த காலில் நின்ற மக்கள் என்ன செய்வதென்று அறியாது திகைத்தார்கள்.

அப்போதுதான் வெளிநாடுகளிலிருந்து எம் மக்கள் நோக்கி உதவிக்கரம் நீண்டது. அவையே அரச சார்பற்ற நிறுவனங்களாகும். உண்மையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு இலவசமாக பணத்தை வாரி இறைக்கவில்லை. அவை மக்கள் சொந்தகாலில் நிற்பதற்கும் தமது எதிர்காலத்தை நல்ல முறையில் அமைப்பதற்குமே உதவி செய்தன. அவர்களது பிரதான நோக்கம் மக்களை வலுவூட்டி அவர்களது வாழ்வாதாரத்தை கிடைக்கும் வளங்களை கொண்டும் சுய ஆற்றலுடனும் அபிவிருத்தி செய்தலாகும்.

அந்த நடைமுறை உண்மையை மக்கள் ஒவ்வொருவரும் தமது மனத்தில் இருத்தல் கட்டாயமானதாகும். நாம் மற்றவர்களின் உதவியில் தங்கியிருப்பவர்களாக இருந்தால் அவர்களது உதவி கிட்டாமல் போகும் சந்தர்ப்பத்தில் எங்கள் நிலை என்ன?

அதனால் தான் கல்வி அமைச்சு கூட ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்க உத்தேசித்துள்ளது. அதன்பிரகாரம் க.பொ.த உயர்தரத்தை பூர்த்தி செய்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு மாணவனும் ஆறுமாதகால தொழில் கல்வி ஒன்றை கட்டாயமாக பெறவேண்டும். ஒரு மாணவன் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் போது உத்தியோகத்தை மட்டும் நம்பியிருப்பதால் அவன் அரசாங்கத்துடனும் ஏன் பெற்றோருடனும் கூட முரண்படுகின்றான். ஆனால் அவன் தொழில்கல்வியை கற்றிருப்பானேயானால் தனது கற்கை முடிவுற்று வெளியேறியதுமே ஒரு வருவாயை ஏற்படுத்திக்கொண்டு சொந்தக்காலில் நிற்கக்கூடியதாக இருக்குமல்லவா?

எமது திறமையை நாமே புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானம், கைத்தொழில், பொறியியல், சட்டம், விளையாட்டு, எழுத்தாற்றல் ஓவியம், ஹோட்டல் முகாமைத்துவம், மருத்துவம் என்று பல துறைகள் இருந்தாலும் நாம் அவற்றில் பிரகாசிக்க கூடிய தொழில்கள் சிலவாகவே இருக்கும். நாம் தெரிவு செய்யும் துறைகளில் எமது திறனை வேகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அது அத்துறையில் மற்றவர்களுக்கு இருக்கும் திறனை விட குறைந்ததாக இருக்கக் கூடாது. அதே சமயம் நாம் நிபுணத்துவம் பெற்ற துறையில் காலதாமதம் செய்தலாகாது. அது எமது சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கு வழங்குவதாக முடிந்துவிடும்.

அதே சமயம் மற்றவர்கள் அவரவர் துறையில் வேகமாக முன்னேறி இருப்பர். புகழின் உச்சிக்கும் சென்றிருப்பர். தமது சொந்த காலில் நிற்பதிலும் வெற்றி பெற்றிருப்பர். அதை பார்த்து சோர்வுறக்கூடாது. பெரும் தலைவர்களினதும், மகான்களினதும் அவதார புருஷர்களினதும் வெற்றிக்கான காரணங்களை புரிந்து கொண்டு நாமும் அவ்வழியில் வேகமாக முன்னேற முயற்சிக்க வேண்டும்.

அதைவிடுத்து மற்றவர்களை பார்த்து பொறாமை வெறுப்பு பகை உணர்வு கொண்டு எமது திறமையை மழுங்கடிக்கக் கூடாது. அது அனாவசிய நேர விரயத்திற்கும், வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும்.

சோம்பல் உங்களை அண்டவிடாது அகற்றுங்கள். மனச்சோர்வுதான் சோம்பலுக்கு ஆதாரம். எமது தாழ்வு மனப்பான்மைதான் மனச்சோர்வுக்கான காரணமாகும். சிலர் வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்திருந்து சிந்தித்துக் கொண்டிருப்பர். அதனால் எந்த இலாபமும் ஏற்படப்போவதில்லை.

முயற்சி செய்யாமல் முன்னேற முடியாது. எம் மீதான எம் நம்பிக்கைதான் வெற்றி தரும். சிந்தியுங்கள். அதை விரைந்து செயற்படுத்துங்கள்.

மற்றவர்கள் உதவியில் தங்கியிருப்பதை அவமானம் என உணருங்கள். அந்த ஒரு உணர்வே வெற்றிக்கான உந்து சக்தியாக அமைந்து விடும். உங்களுக்கான ஜீவனோபாயத்தை நீங்களே அமைத்துக்கொள்ளுங்கள். அது எந்த தொழிலாகவும் இருக்கலாம். செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். அனாவசிய கௌரவத்திற்கு இடம் கொடுக்காதீர்கள். சிறிது சிந்தித்து பாருங்கள். எத்தனை பெற்றோர் கூலி வேலை செய்தும் கூட தமது பிள்ளைகளை பொறியியல் பீடத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் அனுப்பி கல்வி கற்க வைத்திருப்பார்கள். அவர்கள் தமது தொழிலில் கௌரவத்தை பார்த்திருந்தால் உங்களை நல்ல நிலைக்கு ஆளாக்க முடியுமா? நீங்கள் மட்டும் எந்த வகையில் விதிவிலக்கானவர்கள். உங்களுக்கு உதவி செய்தவர்களை தாங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் உங்களிடம் இருக்கின்றதா? அப்படியாயின் உடனே உங்களை சொந்த காலில் ஸ்திரப்படுத்திக்கொண்டு அவர்களை ஆராதியுங்கள்.



இன்று என்பதே உண்மை. நாளை என்பதும் பின்னர் என்பதும் உங்களுக்கு எட்டாமலே போகலாம். இன்னும் சொல்லப்போனல் பிறர் உதவியில் தமது இளமை காலத்தை கழித்தவர்கள் முதிர்சியில் முயற்சியில் ஈடுபட முடியாது. மறுவளமாக நாம் மற்றொரு விடயத்தையும் கருத்துக்கு எடுக்க வேண்டும். அது நாம் பிறருக்கு உதவிசெய்தல் ஆகும்.

எம்மை சார்ந்தவர்களுக்கு நாம் செய்யக்கூடிய பெரும் உதவி அவர்களை விரைந்து அவர்களது சொந்த காலில் நிற்க கூடியதாக உருவாக்குவதே. அவர்களை முழுமை பெற்றவர்களாக உருவாக்கினால்தான் சமுதாயத்திற்கு உதவ முடியும். சமுதாயம் நம் கண்முன்னால் அவர்களை போற்றும்.

"பாத்திரம் அறிந்து பிச்சை போடு" என்று ஒரு பழமொழி உண்டு. ஒருவனது தகுதியையும் தேவையையும் அறிந்தே உதவி செய்ய வேண்டும். "ஒருவனை கெடுக்க திட்டமிட்டால் அவன் கையில் பணத்தை கொடு" என்று சொல்லுவார்கள். எமது பிள்ளைகளுக்காயினும் பணத்தையும், செல்லத்தையும் தொடர்ந்து கொடுத்தால் அது உருப்படாமல் போய்விடுமல்லவா? எனவே உதவி செய்யும் விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்.

பதினெட்டு வயதின் மேல் குழந்தைகள் பருவ வயதை அடைகின்றார்கள். பிள்ளைகள் சிறு வயது முதலே பெற்றோரின் வழிகாட்டலில் வளர்பவர்கள். அவர்களது வளர்சிக்கேற்ப அவர்களை சுயமாக சிந்திக்கவும் சுயமாக தமது கடமைகளை நிறைவேற்றவும் தகுந்தவர்களாக உருவாக்க வேண்டும். அவர்களை சுயசம்பாத்தியத்தில் வாழ வழிகாட்டவேண்டியது பெற்றோரின் கடமையாகும். தவறின் அவர்கள் பெற்றோரில் தங்கியிருப்பதில் சுகம் காண்பதுடன் வரட்டுக்கௌரவம் பேசிக்கொண்டு எந்த தொழிலும் தமக்கு, தமது தகுதிக்கு ஏற்றதல்ல என்று பெருமை பேசித்திரிவர்.

ஒரு சமயம் அவரது பெற்றோர் இறந்து விட்டால் செய்வதறியாது மலைத்துநிற்பார். அல்லது சகோரர்களின் உதவிக்காக கையேந்துவர்.

இனி எமக்கென்று ஒரு பணி இருக்குமாக இருந்தால், அது பிறர் உதவியில் வாழ்பவர்களை அடையாளம் கண்டு ஒதுக்குவதே ஆகும்.!

---

# புத்தி சொல்வதை கேட்டு நடந்தால்....




திருகோணமலையில் சுமேதங்கரபுர பகுதியில் சுமார் ஆறு மாதங்களிற்கு முன்பு இடம்பெற்ற ஓர் நிகழ்வு...

அன்று வெள்ளிக்கிழமை. க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் அவ்வீட்டின் முதல் வாரிசான சஞ்சீவன் தன் தாயாருடன் தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்த்துக் கொண்டிருந்தான். மாலை ஏழு மணியளவில் காவல்துறை அதிகாரியான அவனது தந்தை 2கிலோ மீன்களுடன் விட்டிற்கு வந்தார்.

இந்த இரவில் என்னால் மீனை துப்புரவு செய்ய முடியாது என சத்தமிட்டாள் மனைவி. அம்மா குழம்பினாள், சாதாரண நிலைக்கு கொண்டு வருவது மிகக் கடினம் என்பதை அறிந்திருந்த அவர்களது மகன் அம்மா உங்களுக்கு நான் வெட்டித் தருகின்றேன். என்றான்.

கூறியவாறே தந்தையின் கையில் இருந்த பையை வாங்கிக்கொண்டு சமையலறைக்குள் சென்றான்.

"சஞ்சீவ் அவதானமாக வெட்டிக் கொள்ளாதே" என்றார் தந்தை.

தலையை அசைத்தவாறே தன் வேலையை பார்க்கச் சென்றான் அவன்.

மணி தற்போது எட்டு இருக்கும், கிட்டத்தட்ட அவனது வேலை முடிவிற்கு வந்து கொண்டிருந்தது. கையை கழுவும் முன் ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது அவனுக்கு. மறுமுனையில் நண்பன் ஒருவன், மச்சான் வீட்டிற்கு ஒருக்கால் வந்துவிட்டுப் போடா! என்றான். இப்பவா? ஏன்டா மச்சான் என வினவினான் சஞ்சீவ். அம்மாவிற்கு ஏதோ செய்கிறதாம். நான் தனியே நிற்கின்றேன் என்றான். இவனும் பத்து நிமிடத்தில் வருவதாக கூறி அழைப்பை துண்டித்தான்.

இடத்தை சுத்தம் செய்யும் பொறுப்பை தந்தையிடம் கொடுத்துவிட்டு கையை அலம்பி விட்டு, உடையும் மாற்றாமல் உடன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

நண்பனின் வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு மயானம் காணப்படுகிறது. நேரம் தற்போது 8.30....

அவ்வீதி ஆறு, ஏழு மணியுடன் அடங்கிவிடும். ஒரே ஒரு வீதி விளக்கு தான் அதுவும் மயான வாசலில் இருக்கின்றது. தனது நண்பனின் அம்மாவிற்கு என்னவாகிற்றோ என எண்ணியவாறு சைக்கிளை தன்னால் முடிந்த வேகத்தில் மிதித்துச் சென்று கொண்டிருந்தான்.

சரியாக மயான மதிலருகில் வந்ததும், இவனது கால்கள் மிதிக்க மறுத்தன. அவ்வளவு நேரமும் மெல்லிய குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. திடீரென காற்று காணாமல் போனது. வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. புத்தி உரைத்தது, வேகமாக வந்தமையால் தான் வியர்க்குது....

இருப்பினும் ஏதோ ஒரு பயம் இவனை சுற்றிக் கொண்டது. இவனது உடுப்பில் இருந்த இரத்தவாடை மூக்கைக் கொண்டு சுவாசிக் முடியாத அளவிற்கு மணக்கத் தொடங்கியது. எழுந்த அம் மணத்தினால் மெலிதாக தலை சுற்றுவது போல் இருந்தது. ஏனோ மனம் தடுமாறியது. இருப்பினும் புத்தி பின்னால் திரும்பிப் பார்க்குமாறு எச்சரித்துக் கொண்டே இருந்தது.

இவனுக்கு ஒரு பழக்கம் உள்ளது. புத்தி கூறின் அது எதுவாக இருப்பினும் செய்வான். அவ்வாறு செய்த எக்காரியமும் பிழைத்துப் போனதில்லை. மெல்ல தலையை திருப்பிப் பார்த்தான். தனக்குப் பின்னால் ஒரு நாய் தன்னை நோக்கி மெல்ல நகர்ந்து வந்து கொண்டிருந்தது.காலைக் கீழே ஊன்றி சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். குட்டியாக இருந்த நாய்க்குட்டி அது ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் சிறிது சிறிதாய் வளர்ந்தது.

பார்ப்பதற்கே பயங்கரமாய், கறுப்பிலும் கறுப்பு நிறமாய், கண்கள் இரண்டு சிவப்பாய் கால்களின் நகங்கள் மிகக் கொடிய கூரியதாய் காணப்பட்டன.

அனைத்தையும் (பயத்தை) கழற்றி எறிந்தவன் போல் மீண்டும் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். தன்னால் முடிந்த மட்டில் வேகமாக மிதித்தான் மிதித்தான்.... ஆனால் முடியவில்லை. இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தான். தனது மேல் சட்டையை கழற்றி தூக்கி எறிந்தான். பின் சிறிது தூரம் சென்று மீண்டும் பின்னால் திரும்பிப் பார்த்தான் இப்போது அந்த கறுத்த பருத்த பயங்கரமான நாய் தன் சட்டையை பிய்த்துக் கொண்டிருந்தது.

தற்போது அவனது சைக்கிள் வேகமாக சென்றது.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

# ‘ஈட்டி’

### அதர்வா ஸ்ரீதிவ்யா நடிக்கும்

ரவி அரசு இயக்கத்தில்



போலீஸ் அதிகாரியான ஜெயப்பிரகாஷ் தஞ்சாவூரில் தனது மனைவி, மகன் அதர்வா மற்றும் மகளுடன் வாழ்ந்து வருகிறார். அதர்வாவின் உடம்பில் ஒரு குண்டூசி குத்தினால்கூட ரத்தம் நிற்காமல் செல்லும்.

கொஞ்சம் ஆழமாக குத்தினால் அவரின் உயிருக்கே ஆபத்தாக அமையும். இதை அதர்வா சிறு வயதில் இருக்கும்போதே தெரிந்துகொண்ட ஜெயப்பிரகாஷ் அவரை கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறார்.

விளையாட்டில் அதிக கவனம் செலுத்தினால் அதர்வாவின் பிரச்சினையை ஓரளவு சரிசெய்யலாம் என்று அவரை விளையாட்டில் அதிக ஆர்வம் காட்ட வைக்கிறார் ஜெயப்பிரகாஷ். கல்லூரி படிக்கும் அதர்வா, தடகள பயிற்சியாளர் ஆடுகளம் நரேன் மூலம் தடகள வீரராக உருவெடுக்கிறார். அதன்பின்னர் விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் அதர்வாவை போலீஸ் அதிகாரியாக்க முயற்சிக்கிறார் ஜெயப்பிரகாஷ்.

இந்நிலையில், அதர்வாவுக்கு ராங் கால் மூலம் சென்னையில் இருக்கும் ஸ்ரீதிவ்யாவுடன் பழக்கம் ஏற்படுகிறது. இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறுகிறது. இந்த சமயத்தில் தடகள இறுதி போட்டிக்காக சென்னைக்கு வருகிறார் அதர்வா. சென்னை வந்தவுடன் ஸ்ரீதிவ்யாவை சந்திக்க செல்கிறார் அதர்வா.

இதற்கிடையில், ஸ்ரீதிவ்யாவின் அண்ணனான திருமுருகனுக்கும் கள்ள நோட்டு கும்பலுக்கும் விரோதம் ஏற்படுகிறது. இந்த பிரச்சினையில் ஸ்ரீதிவ்யாவிற்காக அதர்வா தலையிடுகிறார்.

இதனால் கள்ள நோட்டு கும்பல் அதர்வாவை தீர்த்துக்கட்ட முடிவு செய்கிறார்கள். மேலும் அதர்வாவிற்கு சிறு காயம் பட்டால்கூட உயிரிழந்து விடுவான் என்பதை அந்தக் கும்பல் தெரிந்துக் கொள்கிறது.இறுதியில் அதர்வா அந்த கும்பலிடம் தப்பித்து திட்டமிட்டபடி தடகள போட்டியில் கலந்துக் கொண்டாரா? அவரது தந்தையின் லட்சியம் நிறைவேறியதா? என்பதே மீதிக்கதை.

**ஆகவே ஈட்டி கூர்மை**

## ஈழக் கலைஞர்களுக்கு வாய்ப்பளித்த ஏ.ஆர். ரகுமான்

ஈழத்து கலைஞர்கள் பல போராட்டங்களுக்கு பிறகு தங்கள் திறமையை வெளிக்காட்ட நிறைய படைப்புகளை .படைத்து வருகின்றனர். அந்த வகையில் ஈழத்து கலைஞர்களான MC Sai, Olyyn Thanasingh, Arjun ஆகியோருக்கு புதிதாக தயாராக இருக்கும் எந்திரன் 2 படத்தில் பாட வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏ.ஆர். ரகுமான் இசையமைப்பில் பாட வேண்டும் என்று பலர் ஆசைப்பட இக்கலைஞர்களுக்கு தற்போது அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. .

## அஜித்தின் அடுத்த படத்தை தயாரிப்பது இவர் தான்

அஜித் தன் சமீபத்திய படங்கள் அனைத்தும் ஏ.எம்.ரத்னத்திற்கு தான் தயாரிக்கும் வாய்ப்பை வழங்கினார். இந்நிலையில் அஜித் அடுத்து சத்யஜோதி நிறுவனத்திற்காக ஒரு படத்தில் நடிக்கவிருப்பதாக கூறப்பட்டது. ஆனால், சமீபத்தில் வந்த தகவலின்படி அஜித்தின் அடுத்த படத்தை சுரேஷ் பாலாஜி தான் தயாரிக்கவுள்ளாராம். இவர் அஜித்தின் பில்லா-2 படத்தின் தயாரிப்பாளர், அப்படம் தோல்வியடைந்தாலும் அஜித்தை நம்பி மீண்டும் அவர் தயாரிக்கவிருப்பது அனைவருக்கும் ஆச்சரியம் மட்டுமில்லாமல் அஜித்தின் தற்போது மார்க்கெட்டையும் நிரூபித்துள்ளது.

## பசங்க-2 க்கு கட்-அவுட் வேண்டாம்

சென்னை மற்றும் கடலூரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களில் பலர் நேரிடையாக களத்தில் நின்றும் வெளியில் இருந்தும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறீர்கள். உங்களின் மனிதநேய பணி சிறக்க என் வாழ்த்துக்கள். அன்பின் வெளிப்பாடாக எனக்காக நீங்கள் பேனர்கள் வைப்பதையோ போஸ்டர்கள் ஒட்டுவதையோ என்றைக்கும் நான் விரும்பியதில்லை. இதை நான் உங்களிடம் பலமுறை நேரிடையாகவே சொல்லியிருக்கிறேன். வரும் டிசம்பர் 24-ந்தேதி வெளியாக உள்ள பசங்க-2 திரைப்படத்திற்கு தியேட்டர்களை அலங்கரிக்கும் வேலையைச் செய்யாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்.நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயல் பட தலைமை மன்ற அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். வீண் செலவுகளைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணப் பணிகளில் ஈடுபடுங்கள்.என சூர்யா கூறியுள்ளார்.

## அனிருத்திற்கு என்ன ஆனது?

பீப் சாங் சர்ச்சையில் அனிருத்தும் சிக்கியுள்ளது அனைவரும் அறிந்ததே. ஆனால், அந்த பாடலுக்கு நான் இசையமைக்கவில்லை என அனிருத் முன்பே கூறிவிட்டனர்.இந்நிலையில் நேற்று கனடாவில் இருந்து அனிருத் சென்னை திரும்புவதாக கூறப்பட்டது. இந்நிலையில் இசை கலைஞர்கள் அனைவரும் வர அனிருத் மட்டும் வரவில்லையாம். அவர் கனடாவிலேயே தஞ்சம் அடைந்தாரா? அல்லது டெல்லி, மும்பை என சென்றுவிட்டாரா? என பல கேள்விகள் சுற்றி வருகின்றது.




## சிவகார்த்திகேயன் என்னுடன் பைக்கில் சுற்றியது ஏன்?

தமிழ் சினிமாவின் உச்சத்தை நோக்கி செல்கிறார் சிவகார்த்திகேயன். தொட்டதெல்லாம் ஹிட் தான். அந்த வரிசையில் வரும் பொங்கலுக்கு இவருடைய நடிப்பில் ரஜினி முருகன் வெளிவருகின்றது.தற்போது இவர் அறிமுக இயக்குனர் பாக்யராஜ் இயக்கத்தில் நடித்து வருகின்றார். இப்படத்தின் படப்பிடிப்பிற்காக காலை 4 மணிக்கே நடிகர் சதீஸ் உடன் சிவகார்த்திகேயன் புல்லட்டில் சென்னை உலா வந்துள்ளார். இதுக்குறித்து சதீஸ் கூறுகையில் படப்பிடிப்பிற்கு அனைவரும் காரில் செல்ல, சிவகார்த்திகேயன் தான் தன்னை புல்லட்டில் வரும் படி கூறினார். அதிகாலை 4 மணிக்கு செம்ம குளிர் நான் நடுங்கிவிட்டேன், ஆனால் சிவகார்த்திகேயன் செம்ம ஜாலியாக வண்டி ஓட்டினார். பின் ஒரு டீக்கடையில் இறங்க, பலரும் எங்களை கண்டு போட்டோ எடுத்துக்கொண்டனர்.பின் டீக்கடை உரிமையாளர் இன்னும் சிறிது நேரத்தில் 2 பஸ் வரும் சார் என கூற, ரைட்டு கிளம்ப வேண்டிய நேரம் வந்துடுச்சுன்னு கிளம்பிவிட்டோம் என அவர் கலகலப்பாக கூறியுள்ளார்.

## இந்திய அளவில் புலி படத்திற்கு கிடைத்த கௌரவம்

இளைய தளபதி விஜய் நடிப்பில் புலி திரைப்படம் ஒரு சில மாதங்களுக்கு முன் வந்தது. பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட இப்படம் ரசிகர்கள் எதிர்ப்பார்த்த அளவிற்கு வெற்றி அமையவில்லை.இந்நிலையில் இந்த ஆண்டு இந்திய அளவில் கூகுள் தேடலில் அதிக தேடிய படங்களில் புலி படம் 7வது இடத்தை பிடித்துள்ளது. விக்ரமின் ஐ படம் 5வது இடத்தையும் பிரமாண்ட திரைப்படமான பாகுபலி முதல் இடத்தை பிடித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்


INFOMATION TECHNOLOGY

MOBILE

## விவசாயம் செய்யும் ரோபோக்கள்

உணவுத் துறையில் சாதனை செய்யும் விதமாக நவீன மென் பொருள் மற்றும் வன் பொருள்களின் உதவியுடன் விவசாயம் செய்யும் ரோபோக்களை தயாரித்துள்ளனர் ஃபார்ம் போட் நிருவனத்தினர் . இதன் மூலம் விவசாயத்தை நவீன முறையில் கையாள தயாராக்கி வருகின்றனர். ஃபார்ம் போட்டை உபயோகிப்பதன் மூலம் உங்கள் வீட்டின் முன்னோ அல்லது தோட்டத்திலோ விருப்பமான பயிர்களை வளர்க்கலாம்.

திடமான மற்றும் மெல்லிய உருவம் கொண்ட அலுமினியத்தால் உருவாக்கப்பட்டுள்ள சாதனத்தில் 5மிமீ தடித்த தகடுகளுடன் இணைத்து கட்டப்பட்டுள்ளது. மற்றும் சக்தி வாய்ந்த NEMA -17 ஸ்டெப்பர் மோட்டார்களுடன் இணைந்து, மில்லி மீட்டர் துல்லியம் கொண்ட XYZ திசையில் கட்டப்பட்டு உள்ளது. கூடவே இதர பாகங்களான சென்சார்கள் , விதை செலுத்திகள், துளைக்கும் கருவிகள் மற்றும் சில பாகங்களும் அடங்கும். இந்த கருவிகள் அனைத்தும் மின் இணைப்பினை நாடாமல் காந்தத் தன்மையுடன் ஒன்றையொன்று இணைத்துள்ளது.அதனால் செய்யபோகும் வேலைக்கேற்ற தேவையான கருவிகளை தானாகவே தேர்ந்தேடுத்து பயனபடுத்தக் கூடியது. சரியான அளவு மற்று காலநிலை போன்றவற்றில் பயிர்களை வளர்க்ககூடியது. இந்த மாதிரியான நவீன நுட்பங்களை விவசாயத்தில் செலுத்தியது உண்மையில் பாராட்டிற்குறியதே! இதனால் விவசாயத் துறையில் ஒரு மேம்பட்ட வளர்ச்சியினைக் காணும் வாய்ப்புகள் உள்ளது.



## தானியங்கி கார் வடிவமைப்பில் சம்சுங்

கூகுள் நிறுவனம் உட்பட சில முன்னணி கார் வடிவமைப்பு நிறுவனங்கள் தானியங்கி கார்களை உருவாக்கும் முயற்சியில் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன.

இந் நிறுவனங்களின் கார்கள் தற்போது பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவரும் நிலையில் முன்னணி இலத்திரனியல் சாதன வடிவமைப்பு நிறுவனமான சம்சுங்கும் தானியங்கி கார்களை வடிவமைக்கும் பணியில் இறங்கவுள்ளது.

ஆனால் சம்சுங் நிறுவனமானது ஏனைய நிறுவனங்களிலும் சில படிகள் மேலே சென்று பொழுதுபோக்கு அம்சங்கள், செய்மதி தொழில்நுட்பம், தானியங்கி தொழில்நுட்பம் என்பவற்றினை உள்ளடக்கியதாகவே இக்காரினை வடிவமைக்கவுள்ளது.

மேலும் இதனை முற்றுமுழுதாக மின்கலத்தில் இயங்கும் காராக மாற்றியமைப்பதற்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

SAMSUNG

## முடிவை மாற்றியது மைக்ரோசொப்ட்

மைக்ரோசொப்ட் நிறுவனம் OneDrive எனும் ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்கிவருகின்றமை அறிந்ததே. சில தினங்களுக்கு முன்னர் இச்சேவையின் ஊடாக இலவசமாக வழங்கப்படும் 15GB கொள்ளளவை 5GB ஆக குறைக்கவுள்ளதாக அறிவித்திருந்தது. எனினும் பயனர்கள் தெரிவித்த அதிருப்தி காரணமாக அவர்களின் நன்மதிப்பை பாதுகாக்கும் பொருட்டு மீண்டும் 15GB கொள்ளளவையே வழங்க அந்நிறுவனம் முன்வந்துள்ளது. எனவே இலவசமாக 5GB வழங்கப்படும்போது பணம் செலுத்தி கூடிய கொள்ளளவினைப்-பெற்றவர்கள் மீண்டும் 15GB கொள்ளளவினை இலவசமாக்கிக-கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


OneDrive

OTHER


## மறைவுகளைத் தாண்டியும் படம் பிடிக்கும் கமெரா

பொதுவாக மனிதக் கண்ணின் பார்வை நேர்கோட்டிலேயே இருக்கும். அதே போன்றே கமெராக்களும் தமது பார்வை எல்லைக்குள் உள்ள பொருட்களையே படம்பிடிக்கக்கூடியன.


வளைவுகளை தாண்டி பொருட்களை பார்க்கும் ஆற்றல் மனிதனுக்கோ அல்லது தற்போதுள்ள கமெராக்களுக்கோ இல்லை. ஆனால் தற்போது அதனையும் சாத்தியமாக்கும் முயற்சியில் ர்நசழைவ-றுயவவ பல்கலைக் கழக விஞ்ஞானிகள் குழு ஒன்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகின்றது. இக்குழு முன்மொழிந்த திட்டம் ஒன்று வெற்றிகரமாக அமைந்துள்ளது. இத்திட்டமானது ஓ கதிரை செலுத்தி சுவர்களில் அல்லது தடுப்புக்களில் பட்டு தெறிக்கச் செய்யப்பட்டு காட்சிகள் கமெராவுக்குள் உள்வாங்கப்படுதலை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது



## நீண்ட நேரம் மின்சக்தியை வழங்கக்கூடிய ஸ்மார்ட் கைப்பேசி



ஸ்மார்ட் கைப்பேசிகளுக்காக நீண்ட நேரம் மின்சக்தியை வழங்கக்கூடிய மின்கலங்களை உருவாக்க பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன.இவற்றின் அடிப்படையில் அலுமினியம், ஹைட்ரஜன் மற்றும் காளான் என்பவற்றைக் கொண்ட மின்கலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக ஒரு முறை சார்ஜ் செய்த பின்னர் 15 நாட்களுக்கு தொடர்ச்சியாக மின்சக்தியை வழங்கக்கூடிய மின்கலத்தினை ழூரமவைநட எனும் சீன நிறுவனம் உருவாக்கியுள்ளது. 10,000 mAh மின்சக்தியை சேமித்துவைத்திருக்கக்கூடிய இம் மின்கலத்தின் விலை 240 டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்ப்டுள்ளதுடன், இதனை அனைத்து வகையான ஸ்மார்ட் கைப்பேசிகளிலும் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.




## உலகின் முதலாவது டேப்லட் பியானோ




தற்போது மடிக்கணனிகளின் ஆதிக்கம் குறைந்து அனைத்து துறைகளிலும் டேப்லட்களின் ஆதிக்கம் அதிகரித்துவருகின்றது.

இந் நிலையில் முற்றுமுழுதாகவே டேப்லட்டினைக் கொண்டு உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது பியானோவை சம்சுங் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்த பியானோவில் Galaxy Tab S2 வகை டேப்லட்கள் 100 ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும் இது தொடுகை முறை தொழில்நுட்பத்தின் அடிப்படையிலேயே இயக்கப்படக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கணினி தயாரிக்கலாம் வாங்க .....!

எவ்வளவு கணினிகள் புதிது புதிதாக வந்தாலும் அவையனைத்தையும் உருவாக்குவது மற்றும் அதன் கட்டமைப்புகளை அறிந்து கொள்வதற்கான நம்மில் ஆர்வம் பலருக்கு எப்போதும் இருக்கும்.அப்படி ஆசை கொண்டவர்களுக்ககாவே பை-டாப் என்றழைக்கப்படும் மடிக்கணினியினை கிக்ஸ்டாட்டர் நிருவனத்தினர் அறிமுகபடுத்தியுள்ளனர்.இதன் மூலம் வன்பொருள் பற்றி புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள் அனைவரும் பயன்படுத்தலாம். இந்த கணினி பச்சை வண்ண வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கணினியில் மற்ற மடிக் கணினிகளைப் போன்று பயனர்கள் ஒரு கணினியை வாங்கியதும் அதை பாதுகாத்து உபயோகிப்பது என்றில்லாமல் பயனர்கள் அதனை சொந்தமாக உருவாக்கி கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒரு கணினியின் மென்பொருள் மற்றும் வன்பொருள் பற்றிய தகவல்களை அறிந்து சொந்தமாக கணினியினை தயாரித்து பயன்படுத்தலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா தங்கை பாசம்

சிறுகதை

திருமலை வீ.என்சந்திரகாந்தி



**வி**தியின் படி நடக்கும்' என்பது ஒரு நியதியாக இருந்துவிட்டு போகட்டும். ஆனால் அது எனக்கு மட்டும் உரிய கூற்றாக இருப்பதுதான் என்னால் புரிந்து கொள்ள முடியாத விடயமாக இருக்கின்றது.

ஆனாலும் தங்கச்சி பாவம். ஆஸ்பத்திரியிலே சேர்த்து எத்தனை நாளாய் போச்சுது.

இண்டைக்கு சேர்ஜன் பார்ப்பார். அவளுக்கு ஒரு விடிவு வந்துவிடும். காளித்தாய் ஒரு விடிவைக்காட்டாமல் விடமாட்டாள்.

அத்தானுக்கு ஆறுதலாய் இருக்கம். கலியாணம் முடிச்சுக்கொண்டு வீட்டை விட்டு தனிக்குடித்தனம் போய்விடுவார்.

என்ரை மனதுக்கு ஒரு ஓய்வு வந்துவிடும் போலை...!

"லாவண்யா... என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்...? இடியப்பத்தை தட்டிலை பிழிந்து வைத்திருக்கின்றேன். மெலிதாக சீரகச்சம்பல் ஒன்று செய்து கொடுத்தால். சுகன்யாவின் வாய்க்கு இதமாக இருக்கும்.... வந்து என்னெண்டு பாரேன்!"

அம்மாவுக்கு தங்கையிலை அப்படி ஒரு கரிசனை!

'சேர்ஜன்' பத்து மணிக்கெல்லாம் வந்துவிடுவார். தங்கையின் சிறுநீரகத்தில் உள்ள கோளாறை இனம் கண்டுவிட்டால் பிறகு எப்படியும் பரிகாரம் செய்யலாம். மாதா மாதம் இரத்தம் சுத்திகரிப்பதற்காக அலையத்தேவையில்லை.

அதன் பின் அவள் அதிஸ்டக்காரி-யாகிவிடுவாள்.

அத்தானிலை எவ்வளவு அன்பும் எதிர்பார்ப்பும் நான் வைத்திருந்தனான். அப்பா சாகும் போது சொன்ன வார்த்தைகள் எப்பவும் என் உள்ளத்தில் எதிரொலித்துக்கொண்டிருக்கும்.

'என் இரண்டு பிள்ளைகளில் ஒருத்தி என் தங்கையின் மகனைத்தான் செய்ய வேண்டும். !

அப்படியே மாமிக்கும் கூறியிருப்பார் போலை!

அத்தான் பெண் கேட்டு வரும் வரைக்கும் என்னுடைய 'விவாக நினைப்பு' என்ற சிம்மாசனத்தல் அத்தான் தான் வீற்றிருந்தார்!

தங்கை எனக்கு மிக இளையவள். அவள் அப்போ 'கண்டுபிடி கண்டுபிடி' விளையாடிக்கொண்டிருந்தாள்.

அத்தான் வந்து போனார்...

அம்மா இலாவகமாக எடுத்து-ரைத்தாள்...' பிள்ளை... உன்ரை தங்கச்சிதானே விட்டுக்கொடு. காளி ஆச்சி உனக்காக கண் திறக்காமல் இருக்கப்போறாளே?'

என்னுடைய முதலாவது விட்டுக்கொடுப்பு.

'கோலிங் பெல்' சத்தம் கேட்கவும் அம்மாவின் குரல் 'வோசிங் ரூமிலிருந்து' கேட்டது.

'பிள்ளை, சாப்பாட்டு பார்சலையும் எடுத்து வைத்து கூடையை கொத்தா-னிடம் குடு. நான் பத்துநிமிடத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்திடுவன் எண்டு சொல்லு.'

அத்தானிடம் கூடையை கொடுத்த போது. மின்னல் போல் ஒரு நினைப்பு என்னை தாக்கியது.

தங்கச்சிக்கு ஏதாவது நடந்தால் அத்தான் என்னைத்தான் முடிக்க கேட்பார். இது என்ன அநியாயம்? மனம் சில வேளைகளில் நாங்கள் கருதாததுகளையும் தானல்லே நினைக்குது? தங்கச்சி பாவம். அவள் வாழவேண்டும்.

அத்தானை அனுப்பிவிட்டு வீட்டை கூட்டிப்பெருக்கினேன்.

அத்தானுக்கு தங்கச்சியிலை ஆசை! வீட்டிலையும் கொள்ளை ஆசை!

அம்மாதான் கேட்டவா...' பிள்ளை, உன்ரை தங்கச்சிதானே....? யாரோவோ...? வீட்டை தங்கச்சிக்கு கொடுப்பம்.!

என்னுடைய இரண்டாவது விட்டுக்கொடுப்பு.!

அம்மா ஆஸ்பத்திரியாலே வர இரண்டு மணியாய் போய்விட்டது. வழக்கத்துக்கு மாறாக அத்தானும் அம்மாவுடன் கூட எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்.

இருவரின் முகத்திலும் ஈயாட-வில்லை அத்தான் முன் மண்டபத்தில் அமர அம்மா ஓடிப்போய் கட்டிலில் விழ நான் பின்னால் ஓடிப்போனேன்.

அம்மா அழுகையின் மத்தியில்...' பிள்ளை கொத்தான் உன்னோடை கதைக்க வேணுமாம். போய் கதை.'

எனக்கு ஆயிரம் நினைப்புக்கள் தோன்றி உள்ளத்தில் நர்த்தனம் புரிந்தன.

தங்கச்சிக்கு கடுமையோ... நான் கருதாமலோ என்னவோ எனது மனம் நினைத்தது போல அத்தான் எனக்கே கிடைத்துவிடுவாரோ... சே அப்படி-யெல்லாம் நடக்க கூடாது.

முகத்தை மூடியிருந்த இரண்டு கரங்களையும் விலக்கிவிட்டு.... அத்தான் கூறினார்.

'லாவண்யா... சுகன்யாவிற்கு சிறுநீரகத்தல் தொற்று ஏற்பட்டு விட்டது. அவள் தப்புவது கஸ்டம்..."

என்னுடைய நெஞ்சு பட பட என அடித்தது. அப்படியும் நடந்துவிடுமோ...?

சிறிய நேர இடை-வெளியில் அத்தான் கேட்டே விட்டார்.

'லாவண்யா.. உன்னுடைய சிறுநீரகம் ஒன்றை உனது தங்கைக்கு கொடுப்பாயா?'

என்னால் எப்படி மறுக்க முடியும் ஏற்றுக்கொண்டேன்.

ஆம் என் மூன்றாவது விட்டுக்கொடுப்பு!

எனது இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றை எனது தங்கைக்கு கொடுப்ப-தற்கு நான் ஏன் தயங்கவேண்டும். நீரை உகுத்தன... என் விழிகள் இரண்டும். இதயத்தை மட்டும் இறைவன் ஏன் ஒற்றையாய் படைத்தான்?

---

# "ஐம்பதிலும் ஆசை வரலாம்..." – தப்பே இல்லே....

சாதாரமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

**எ**னது ஒஸ்லோ முருகன் சத்தியமாக இது 110% உண்மைக் கதை.

முன்பின் அறியாத ஒருதொலைபேசி இலக்கத்தில் இருந்து நோர்வேஜியமொழியிலான ஒரு குறுஞ்செய்தி இப்படிக்கூறியது

"சஞ்சயன்! உன்னை அந்தப் பெண்ணுக்கு மிகவும் பிடித்திருக்கிறது)". எனது நிறத்தையுடடைய ஒரு பெருங்கவி கூறியது போன்று "கழுத்துக்கும் தொண்டைக்கும் இடையே உருவம் இல்லாதொரு உருண்டை உருளத்தொடங்கியது" குறுஞ்-செய்தியின் இறுதில் இருந்த கண்சிமிட்டும் சித்திரம் என் நெஞ்சுக்குள் சிமிட்டத்தொடங்கியது.

யாராக இருக்கும்? என்று மண்டையைப் பிய்த்துக்-கொண்டுதேடினேன். பதில் கிடைத்தாயில்லை. அவள் யார்? எப்படி இருப்பாள்? கறுப்பா வெள்ளையா மஞ்சலா? எந்த இனத்தவள்? அ.முத்துலிங்கம் அய்யாவின் கதைகளில் வரும் குறிப்பிட்ட "அந்தப் பகுதி" மட்டும் பெருத்த ஆபிரிக்க அழகியா? இல்லை பாரசீகத்துப் பைங்கிளியா? இல்லை பளிங்குபோன்ற வெள்ளைத் தேவதையா? அல்லது அற்புத அழகிகளைக்கொண்ட இனத்தவளான ஒரு தமிழிச்சியா?

தனியே வாழும் ஒருவனுக்கு, அதுவும் 47 வயது இளைஞனுக்கு இப்படி ஒரு குறுஞ்செய்தி வந்தால் அவன் நிலை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஐந்து முறை அதிஸ்டலாபச்சீட்டு விழுந்தவனை விட மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தேன் நான்.

என் சாப்பாட்டை ஊறுகாய்தான் சுவையாக்குகிறது என்பதை அறிந்த சமயற்கலை வல்லுனன் நான்.

வரப்போவது ஒரு அழகிய தமிழ் ராட்சசியாக இருந்தால், புட்டும் கருவாட்டுப்பிரட்டலும், இடியப்பமும் சொதியும், சோறும், பற்பல கறிகள், வறுவல்கள், பொரியல்கள், ரசம், பாயசம்.. நினைக்கவே வயிறு நிறைந்தது போன்றிருந்தது.

நமக்குத்தானே சாப்பாட்டில் இதுதான் வேண்டும் என்ற நியதியில்லையே.

எதையும் கொட்டிக்கொள்ளும் பன்றி நான். எனவே "பின் பக்கம்" பெருத்த ஆபிரிக்க அழகி கிடைத்தாலும் அவளுக்காக அவளின் சாப்பாட்டையும், அவளையும் ரசிக்கமாட்டேனா, என்ன?. அந்தளவுக்கு நான் ஒன்றும் மட்டமான ரசிகன் அல்லவே.

ஒருவேளை வருபவள் தென்கிழக்காசிய நாட்டைச் சேர்ந்த, சாண்டில்யனின் "கடற்புறா" கதாநாயகி, மஞ்சளழகியைப் போன்றவளாக இருந்தால், தவளை பாம்பு கரப்பொத்தான் போன்றவற்றையும் ஒரு கைபார்க்கலாம், என்று கற்பனை-யோடிக்கொண்டிருந்தது.

அவள் யார் என்பதை அறியவேண்டும் என்ற வேகத்தில் கணிணியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டேன் (கண்மணியை எடுத்து மடியில் வைத்துக்கொண்டேன் என்று நீங்கள் வாசித்தால் அதற்கு கம்பனி பொறுப்பல்ல)

நோர்வேயில் தொலைபேசி எண் இருப்பின் இணையத்தின் மூலமாக பெயர், விலாசம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளலாம். எனவே அவளை அங்கு தேடுவோம் என்று நினைத்தபடியே, அவளின் தொலைபேசி இலக்கத்தை எழுதி "தேடு" என்று தட்டிவிட்டேன்.

கணிணி அவளைத் தேடுவதற்கு பாவித்த கணப்பொழுதினுள் அவள் பெரும் பணம் படைத்தவளாக இருப்பாளோ? அப்போ நாம் கரையேறிவிடலாம் என்றெல்லாம் கற்பனைக்குதிரை கடிவாளத்தை அறுத்தெறிந்தபடியே காற்றில் கடுகிக்கொண்டிருந்தது.

கணிணி, அந்தப் பெயரில் உள்ளவர், தனது பெயர் விலாசத்தை வெளியிடவிரும்பவில்லை என்று குண்டைத்தூக்கிப்போட்டது. யானை மிதித்த தக்காளிபோன்றாயிற்று மனம்.

இலக்கம் இருக்கிறதே, நேரடியாகவே பேசலாமே என்று ஆறுதல் சொல்லிற்று தோல்வியை ஏற்கவிரும்பாத மனம்.

எப்படி ஆரம்பிப்பது? என்ன சொல்வது? என்றெல்லாம் சிந்தித்தேன்.

"ஹீம் ... நான் சஞ்சயன் பேசுகிறேன். நீங்கள் யார் பேசுவது?" என்று எனது அழகிய குரலால் இரண்டு தடவைகள் பயிற்சி செய்து பார்த்துக்கொண்டேன். குரலில் சற்று அன்பு, ஆண்மை கலந்து பேசிப்பார்த்தேன். திருப்தியாய் இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் வார்த்தைகளையும், குரலின் அளவு, ஆண்மையின் அளவுகளை மாற்றிப்பார்த்து இறுதியில் இப்படித்தான் பேசுவது என்று முடிவுசெய்துகொண்டேன்.

தொலைபேசி எடுக்குமுன் குளியலறைக்குள் சென்று கண்ணாடியின்முன் நின்று பேசிப்பார்த்தேன். எனது அழகிய வண்டி வெளியே தெரிந்தது. அதை எக்கிப்பிடித்தபடியே மீண்டும் சொல்லிப்பார்த்தேன். குரலும், நானும் அழகாய் தெரிந்தது போலிருந்தது எனக்கு.

கதிரையில் அமர்ந்துகொண்டேன். தொலைபேசியை எடுத்தேன். குறுஞ்செய்தியை மீண்டும் மீண்டும் இரண்டுதடவைகள் வாசித்தேன். "உன்னை அந்தப் பெண்ணுக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்ற வார்த்தைகள் அன்றொரு நாள் எஸ்.ராமகிருஸ்ணனின் "காற்றில் யாரோ நடக்கிறார்கள்" வாசித்தபோது காற்றில் எப்படி நடப்பது என்று தோன்றிய சந்தேகத்தை தீர்த்துவைத்தது.

அந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டேன்.

மணி அடித்தது, மணி அடித்தது, மணி அடித்துக்கொண்டே இருந்தது.

எவரும் எடுக்கவில்லை. மனம் பொறுமையற்று அலைந்தது. மீண்டும் அழுத்தினேன் அந்த இலக்கத்தை.

மணி அடித்தது, மணி அடித்தது, தொடந்து அடித்துக்கொண்டே இருந்தது. வெறுப்பில் தொலைபேசியை துண்டிக்க நினைத்துபோது மறுகரையில் பெண்ணின் குரல் கேட்டது.

நீங்கள் யார் பேசுவது என்றேன். பெயரைச் சொன்னாள் அப் பெண். சரி என்னை யாருக்கோ பிடித்திருப்பதாய் சொன்னீர்களே அது யார்? என்றேன் ஆண்மையும், அதிகாரமும் அன்பும் கலந்து.

க்ளுக் க்ளுக் என்று சிரிக்கும் சத்தம் கேட்டது மறுபக்கத்தில் இருந்து. "ஓ அதுவா. என் வீட்டில் உன்னைச் சந்தித்த எனது நண்பிதான் அது" என்றது தொ(ல்)லைபேசி.

இவ்விடத்தில் சிறியதொரு flashback.

இன்று காலை நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது தொலைபேசி சிணுங்கியது. எடுத்தேன்.

நீதானா கணிணி திருத்துவது என்று ஒரு பெண்குரல் கேட்டது. ஆம் என்று கூறியபோது, மதியம் வீட்டுக்கு வா. கணிணி திருத்தவேண்டும் என்று கட்டளையிட்டார் அப் பெண். விலாசத்தை வாங்கிக்கொண்டேன்.

நான் அவர் வீடு சென்ற போது அவரும் அவரின் அழகிய நண்பியும் அங்கிருந்தார்கள். அவர்களுடன் பேசியபடியே கணிணியை திருத்தினேன். கேக், தேனீர், பழங்கள் என்று அந்தப் பெண்ணிண் நண்பி என்னை பலமாய் கவனித்தார். அவரது ஐபோன் பிரச்சனையையும் அவரருகில் உட்கார்ந்திருந்து தீர்த்துவைத்தேன்.

எங்கள் பேச்சு வாழ்க்கை பற்றித் திரும்பியது. அவர் தனியே வாழ்கிறேன் என்றார். நானும் அப்படியே என்றேன். அவருக்கு வாசிப்பில் நாட்டுமுண்டு எனக்கும் அப்படியே. நாம் எங்களை மறந்து உரையாடுவதைக் கண்ட நண்பி எங்களை தனியேவிட்டுவிட்டு தனது நாயுடன் வெளியே சென்றார். நாம் உரையாடிக்கொண்டிருந்தோம். எனக்கு மீண்டும் ஒருமுறை தேனீர் ஊற்றித்தந்தார் அவர்.

கணிணி திருத்தி முடித்தேன். நாயுடன் சென்ற நண்பி வீடு திரும்பியபின் நான் வீடுசெல்லப் புறப்பட்டேன். இருவரும் வாசல்வரை வந்து வந்து வழியனுப்பினார்கள். நண்பியோ எனது ஆஸ்தான கணிணி திருத்துபவன் நீதான் என்பது போல் கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்பினார். வீட்டுக்கு வெளியே நின்றபடியே கைகாட்டி விடைபெற்றேன்.

வீட்டுக்குள் இருந்து 70 வயதான அவ்விருவரும் கைகாட்டியபடியே, பொக்கைவாயால் சிரித்துக்-கொண்டிருந்தார்கள்.

நான் பனிகொட்டிய நிலத்தில் வழுக்கிவிழாமல் நடப்பதற்கு முயன்றபடியே நடக்கத்தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### சிக்கன் கிரேவி

**தேவையான பொருட்கள்**

சிக்கன் - ½ கிலோ, வெங்காயம் - 2, தக்காளி – 1, மிளகுத்தூள் - 50 கிராம், மிளகாய்த் தூள் - ½ தே.கரண்டி, மஞ்சள் - ½ தே.கரண்டி , தேங்காய் - ½ மூடி, எண்ணெய் - 2 தே.கரண்டி, இஞ்சி - பூண்டு அரைத்தது - 1 தே.கரண்டி, உப்பூ தேவையான அளவு

**செய்முறை**



ஒரு பாத்திரத்தில், சிக்கன், உப்பு, மஞ்சள், இஞ்சிப்பூண்டு விழுது இவற்றைக் கலந்து, ஒரு தே.கரண்டி தயிர் சேர்த்து இறுக்கமான மூடிபோட்டு மூடி, அவனில் 5 நிமிடங்கள் வரையில் சமைக்கவும்.


அதன் பிறகு அந்தப் பாத்திரத்தைத் திறந்து மிளகு, மிளகாய்ப் பொடி, தக்காளி, வெங்காயம் அரைத்த விழுதைச் சேர்த்து மூடி, 3 நிமிடங்களுக்கு அவிய விடவும்.

பிறகு அவனிலிருந்து வெளியே எடுத்து, மூடியைத் திறந்து 3 நிமிடங்கள் மெதுவான சூட்டில் வைக்கவும். பாத்திரத்தை 2 நிமிடங்கள் அப்படியே வைத்திருந்த பிறகு, சுவையான சிக்கன் கிரேவியை எடுத்துப் பரிமாறவும்.

## கண்புரை எப்போது ஏற்படுகிறது?

கண் புரை நோய் அறிகுறிகள்

கண்பார்வை மங்குதல், வண்ணங்கள் மங்கலாக தெரிதல், இரவு கண்பார்வை இழத்தல், அதிக ஒளிவட்டத்தால் கண்கள் கூசுதல், தெளிவற்ற பார்வை அல்லது பிம்பங்கள் பல எண்ணிக்கையில் தெரிதல்.




### சிகிச்சை

- கண் புரை நோயின் தொடக்க நிலை என்றால் மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் கண்ணாடி அணிந்தாலே போதுமானது.
- நாள்பட்டது எனில் அறுவை சிகிச்சை செய்வதே நல்லது. இதனால் பாதிக்கப்பட்ட லென்ஸ் அகற்றப்பட்டு கண்பார்வையை மீட்டெடுக்கலாம்.
- இப்போது பல நவீன கண் புரை அறுவை சிகிச்சை முறைகள் மருத்துவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் போகோயெமல்சிபிகேஷன் (Phacoemulsification or phaco) எனும் முறை மூலம், முழுமையாக கண் புரையை நீக்கி விடலாம்.
- அறுவை சிகிச்சைக்கு பின்னர் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் காலம் வரையில் சொட்டு மருந்துகள் பயன்படுத்த வேண்டும்.


**முற்றும்.. ..**

## டிசைன்ஸ்









## அழகு குறிப்பு



### எடையை குறைக்க சில டிப்ஸ்



ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் பெரும் பிரச்சனையாக இருப்பது உடல் பருமன் அல்லது ஊளைச் சதை உடம்பு. இதற்கு ஆண்களுக்கு முக்கிய காரணமாக அமைவது பணியிடத்தில் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வது, வீட்டுச் சாப்பாடு இல்லாமல் கண்ட இடங்களில் கண்டவற்றை வாங்கிச் சாப்பிடுவதால் கொழுப்பு அதிகரிப்பது போன்றவையாகும்.

பெண்களைப் பொறுத்தவரை உடல் உழைப்பு குறைந்து போனது மட்டுமின்றி, போதுமான சத்தான உணவு இல்லாததும் ஒரு காரணமாக இருக்கிறது. இதுதவிர, அதிக நேரம் தொலைக்காட்சி முன்பு அமர்வது, பகலில் அதிக நேரம் தூங்குவது போன்றவையும் காரணமாக உள்ளது.


**இதுபோன்றவர்களுக்கு எளிய வழியில் உடல் பருமனைக் குறைப்பது எப்படி ?**

- சாதாரணமாகத் தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக சோம்பு கலந்த தண்ணீரைப் பருகி வந்தால் உடம்பில் உள்ள ஊளைச் சதை குறைந்து உடல் வடிவம் அழகு பெறும்.
- சாப்பிடும் உணவில் பூண்டு, வெங்காயம் அதிகமாகச் சேர்த்து வந்தால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் குறைத்து உடலிற்கு புத்துணர்ச்சி தரும்.
- சுரைக்காய் வாரத்திற்கு 2 தடவை சாப்பிட்டு வந்தால் வயிற்றுச் சதை குறையும்.
- மேலும் சதை போடுவதைத் தடுக்க வேண்டுமென்றால், தேநீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து காலையில் குடித்துவர வேண்டும். இதுதவிர, வாழைத்தண்டு சாறு, அருகம்புல் சாறு இவற்றில் ஏதாவது ஒன்றை தொடர்ந்து பருகி வந்தாலும் சதை போடுவதைத் தடுக்கலாம்.
- இது எல்லாவற்றிற்கும் மேலாக காலையில் அரை மணி நேர□ம் நடைபயிற்சி மேற்கொண்டால் கொழுப்பும் கரையும், உடல் எடையும் குறையும், புத்துணர்வாகவும் இருக்கும்.
- சாப்பாட்டில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக் கொள்வது உடல் எடையை குறைக்கும். கொள்ளு ரசம், கொள்ளு சுண்டல் போன்றவை செய்து சாப்பிடலாம்.
- அதை விட இரவு நேரத்தில் ஒரு கைப்பிடி கொள்ளு எடுத்து தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்தவுடன் முதலில் அதை சாப்பிட்டு விடுங்கள். இது நிச்சயம் எடையை குறைக்கும்.



## இப்படியும் நடக்கலாம்

### தாக்குதலைத் தொடர்ந்து உடனடி நடவடிக்கை - பிரான்சில்



பிரான்ஸ் நாட்டில் உள்ள விமான நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்த இஸ்லாமிய ஊழியர்கள் தாடியை நீளமாக வைத்திருந்த காரணத்திற்காக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் பாரீஸில் கடந்த நவம்பர் 13ம் திகதி ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பிறகு பிரான்ஸில் உள்ள Orly என்ற விமான நிறுவனம் இஸ்லாமிய ஊழியர்கள் மீது மேற்படி கடுமையான விதிமுறைகளை விதித்தது. தாக்குதல் நடந்த சில நாட்களுக்கு பிறகு, விமான நிலையத்தில் பணிபுரிந்த ஒட்டுமொத்த இஸ்லாமியர் ஊழியர்களையும் அழைத்து ஒரு ஆலோசனை கூட்டத்தை நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### "ஐ.எஸ் ஐ அழித்துவிடுங்கள்" கோரும் அவலப் பெண்




ஈராக்கில் வசித்துவந்த நாதியா முராத் பாசீ தாஹா என்ற பெண்ணையும் மற்றும் சில பெண்களும் ஐ.எஸ தீவிரவாதிகளின் தலைமையிடமான மோசூல் நகருக்கு கடத்திச்செல்லப்பட்டுள்ளனர். பின் அங்கிருந்து தப்பித்த அப்பெண், "அங்கு பெண்களின் உடல்கள் இறைச்சியை விற்பது போன்று விற்கப்பட்டன. தீவிரவாதிகளுக்கு பணிவிடை செய்ய வற்புறுத்தப்பட்ட நான், சுயநினைவை இழக்கும்வரை அவர்களால் சித்ரவதை செய்யப்பட்டேன், என்னுடைய சகோதரர்கள் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டனர் எனவும் ஐ.எஸ் தீவிரவாதிகளை அழித்துவிடுமாறு ஐநாவிற்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மாணவனுக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை



அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப் சிஸம், தன்னுடைய ஆசிரியையான கொல்லீன் ரிட்ஸர் என்பவரை பள்ளியின் கழிவறையில் வைத்து கற்பழித்ததுடன் அவரது உடம்பில் 16 இடங்களில் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார். பின்னர் குப்பை தொட்டியில் வைத்து கொல்லீனின் உடலை அவர் கொண்டு சென்றுள்ளார். அவ்வாறு அவர் கொண்டு செல்லும் காட்சி அங்கிருந்த காமிராவில் பதிவாகியிருந்தது. இதையடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்பட்டதால் நீதிபதிகள் பிலிப்பிற்கு வாழ்நாள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்தனர்.

### காற்று விற்பனை

சீனாவில் வெளியேறுகிற புகை அதிகரித்து வருவதனால் இதுவரை இல்லாத அதிக அளவிலான பனிப் புகை ஏற்பட்டுள்ளது. எனவே கனடாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று பெரும் மாசு சிக்கலில் தவித்துவரும் சீனாவிற்கு தூய்மையான மலைக் காற்றை பாட்டிலில் அடைத்து விற்பனை செய்ய தொடங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆண் பெண் ஜனாஸாக்களுக்கு, ஒரே நேரத்தில் தொழுகை நடத்தலாமா?

*-உஸ்தாத் இம்தியாஸ் ஸலபி*

ஆண் மைத்துக்களையும் பெண் மையத்துக்களையும் ஜனாஸா தொழுகை நடத்த ஒரே நேரத்தில் கொண்டு வந்தால் முதலில் ஆண் மையத்திற்கு தொழுகை நடத்தி விட்டு பிறகு பெண் மையத்துக்கு தொழுகை நடத்துகின்ற ஒரு காட்சியை சில சந்தர்ப்பங்களில் காணமுடிகிறது.

ஆண் மையத்திற்கும் பெண் மையத்திற்கும் ஒரே நேரத்தில் ஜனாஸா தொழுகை நடத்தக் கூடாது என்ற எண்ணத்தில் தான் இப்படி செய்கிறார்கள். நபி (ஸல்) அவர்களின் சுன்னா பற்றிய சரியான தெளிவு அவர்களுக்கு இல்லாததால் தான் இப்படி செய்கிறார்கள். இது தவறாகும்.



ஆண் மையத்திற்கும் பெண் மையத்திற்கும் ஒரே நேரத்தில் ஒரு ஜமாஆத்தாக இருந்து தொழுகை நடத்தலாம். நடத்தவும் வேண்டும் என்பதே நபிகளாரின் சுன்னாவாகும். அப்படி தொழுகை நடத்தும் போது முதலில் கிப்லாவை நோக்கி பெண் மையத்தையும் அதற்கடுத்து (சிறுவர்களின் ஜனாஸாக்கள் இருந்தால் அவர்களது மையத்துக்களையும்) அதற்கடுத்து ஆண் மையத்தையும் வைக்க வேண்டும். அதற்கடுத்து தொழுகை நடத்தக்கூடிய இமாமும், இமாமுக்கு அடுத்து தொழக் கூடியவர்களும் (ம:ஃமூம்களும்) நிற்க வேண்டும்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் ஒன்பது ஜனாஸாக்களக்கும் சேர்த்து ஒரே (ஒரு முறை) தொழுகையாக தொழுவித்தார்கள். (அதில் ஆண், பெண் ஜனாஸாக்கள் இருந்தன). கிப்லாவை நோக்கி பெண் ஜனாஸாக்களையும் அதற்கடுத்து ஆண் ஜனாஸாக்களையும் அதன் பின் இமாமை அடுத்து மக்களையும் ஒரே அணியாக வைத்து (தொழுவித்தார்)கள்.

தொடரும் .. ..

– எம்.ஜே.எம். ரிஷ்வான் –

## ஜெபம்

***கடவுள் நம் தேவைகளையும் அறிந்திருப்பவர். பின்னர் நாம் ஏன் நம் தேவைகளுக்ககாக ஜெபிக்க வேண்டும்? ஏன் மீண்டும் மீண்டும் ஜெபிக்கவேண்டும்?***

நாம் ஜெபம் செய்யும் போது தாழ்ச்சியான உள்ளத்தையும் கடவுள் முன் நம்முடைய இயலாமையையும் வெளிப்படுத்து-கிறோம்.

இவ்வாறு செய்வது கொடுத்துக்-கொண்டே இருக்கின்ற கடவுளின் கொடைகளை நாம் பெறுவதற்கு நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளும் கருவியாக ஜெபம் அமைகின்றது. ஆகவே நாம் தொடாந்து ஜெபம் செய்ய வேண்டும்.

உம் அடியானின் மனத்தை மகிழச் செய்யும் என் தலைவரே! உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்து-கின்றேன். ஏனெனில் என் தலைவரே! நீர் நல்லவர் மன்னிப்பவர் உம்மை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் பேரன்பு காட்டுபவர். ஆண்டவரே, என் வேண்டுதலுக்குச் செவிகொடும் உம் உதவியை நாடும் என் குரலைக் கேட்டருளும். என் துன்ப நாளில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன் நீரும் எனக்குப் பதிலளிப்பீர். சங்கீதம் 86:4-7

எந்த நிலையில் ஜெபம் செய்யவேண்டும்? முழந்தாள்படியிட்டு?



கைகூப்பி?

.விவிலியத்தில் மக்கள் ஜெபம் செய்யும் போது பல்வேறு நிலைகளில் ஜெபிக்கின்றதைக் காண்கிறோம். நின்றுகொண்டு, கைகளை உயர்தி, கவிழ்ந்து, உட்கார்ந்து, முழந்தாள்படியிட்டு ஜெபித்திருக்கிறார்கள். எந்-நிலையிலும் ஜெபிக்கலாம் என்றாலும் முடிகின்ற சூழ்நிலைகளில் முழந்தாள் படியிட்டு கைகூப்பி ஜெபிப்பது கடவுளுக்கு முன் நமது தாழ்ச்சியையும் பணிவையும் எடுத்துக்காட்டும் வண்ணமாக அமைகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக உண்மையாக, பயபக்தியோடு ஜெபிப்பது உகந்தது.

தொடரும் .. .

www.bible.me

## இரவில் தூக்கம் வராது தவிக்கின்றீர்களா???

உணவு எந்தளவு முக்கியமானதோ அதே அளவு தூக்கமும் முக்கியமானதே. தூக்கம் என்பது உடல் மற்றும் மனதிற்கு புத்துணர்ச்சியை வழங்கக்கூடியது. அதே போன்று தூக்கம் என்பது எப்போது பிஸியாகவே இருக்கும் மூளைக்கும் சிறிது ஓய்வை தரக்கூடிய ஒன்றாகும்.



ஆனால் நம்மில் பலரும் தூக்கம் வரவில்லை என்று தவித்து வரலாம். அதற்கு காரணம் இன்சொம்னி-யாவாக (Insomnia) கூட இருக்கலாம்.

இன்சொம்னியா என்பது தூங்குவதற்கு கடினப்படுவது அல்லது தூங்காமலேயே விழித்திருக்கும் ஒரு நிலையாகும்.

### அறிகுறிகள்

- இன்சொம்னியா நிலையில் இருப்பவர்களால் எளிதில் தூங்க முடியாது.
- இரவில் திடீரென தூக்கத்தில் இருந்து விழித்துவிட்டால் மறுபடியும் தூக்கம் வருவது கடினமாக இருக்கும்.
- தூங்கி எழும்போது களைப்பாக இருக்கும்.

இவையெல்லாம் இன்சொம்னியாவின் அறிகுறி-யாகும். இதிலும் இரண்டு வகைகள் உள்ளன.

அதாவது, வேறு எந்த நோயுடனும் தொடர்பு இல்லாமல் தூங்குவதில் பிரச்சனை ஏற்பட்டால் அது முதன்மை இன்சொம்னியா என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் ஆஸ்துமா, மன அழுத்தம், புற்றுநோய், மது உட்கொள்வது ஆகியவற்றின் காரணமாக தூக்கம் வரவில்லை என்றால் அது இரண்டாம் இன்சொம்னியா என்று கூறப்படுகிறது.

### காரணங்கள் என்ன?

- நோய் காரணமாகவும், சுற்றுச்சூழல் காரணமாகவும் சிலருக்கு இன்சொம்னியா ஏற்படக்கூடும்.
- அதே போன்று பணியின் காரணமாக ஏற்படும் மன அழுத்தம் மற்றும் நெருங்கியவர்களின் பிரிவு போன்றவை காரணமாகவும் நமது தூக்கம் பாதிப்படையக்கூடும்.

தொடரும் .. ..




மெகா சீரியல் பார்த்து அழும் பெண்களை விட... கல்யாண சீடி பார்த்து அழும் ஆண்களே அதிகம்

மருந்து சீட்டில பிள்ளையார் சுழி போட்டிராதீங்க டாக்டர்.

**ஏனய்யா?**

போன தடவை இப்படித்தான் அதையும் ஒரு மருந்து என நினைத்து மாத்திரை தந்திட்டாங்க ஃபார்மஸியில....

அந்த கவர்ச்சி நடிகை நம் தமிழ் சினிமா ரசிகர்களை டாக்டராகவோ அல்லது வக்கீலாகவோ தான் பார்ப்பாங்களாம். ஏன் அப்படி??

**அவங்க கிட்ட எதையும் மறைக்கக் கூடாது என்றதால....**

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : குடும்பத்தின் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். விவகாரங்க-ளில் சமரச தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் இலக்கு நிறைவேற தாமதமாகலாம்.

**ரிஷபம்** : செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். திட்டமிட்ட பணி நிறைவேறும். கருத்துவேறுபாடு ஏற்படலாம். வட்டிக்கு கடன் வாங்க வேண்டாம்.

**மிதுனம்** : மனதில் நம்பிக்கை ஏற்படும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கும். அதிக மூலதனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள்.

**கடகம்** : இனிய எண்ணங்கள் மனதை உற்சாகப்படுத்தும். ஒதுக்கி வைத்த பணியை விருப்பமுடன் நிறைவேற்றுவீர்கள். புதியவர்-களின் உதவி எதிர்பாராமல் கிடைக்கும்.

**சிம்மம்**: நிதானமின்மை ஏற்படலாம். மாறுபட்ட கருத்து உள்ளவர்களை விட்டு விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும்.

**கன்னி** : மனதில் தைரியம், செயலில் திறமை வெளிப்படும். பொதுநலப் பணியில் ஈடுபாடு வளரும். நண்பர்களிடம் கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். சேமிப்பு கூடும்.

**துலாம்** : வீண்செலவு குறையும். உடல்நிலையில் கவனம் தேவை. வியாபாரம் செழிக்கும். பாக்கிப் பணம் வசூலாகும். பணியாளர்கள் கடமை உணர்ந்து பணிபுரிவர்.

**விருச்சிகம்** : பணிகளை விரைந்து முடிக்க வாய்ப்பு கிட்டும். நல்லவர்களின் உதவி கை கொடுக்கும். தாயாரின் தேவையை நிறை-வேற்றுவீர்கள். மனம் புத்துணர்வு பெறும்.

**தனுசு** : எதிர்பார்த்த நிதியுதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் வேலை அதிகம் இருந்தாலும், பணவரவால் மகிழ்வீர்கள்.

**மகரம்** :தாமதமான செயல்கள் முயற்சியால் நிறைவேறும். சமூகத்தில் அந்தஸ்து கூடும். அளவான உழைப்பும், ஓய்வுமே, உடல்நலத்-தை பாதுகாக்கும். வியாபாரம் செழிக்கும்.

**கும்பம்** : பழகுபவர்களின் எண்ணம் உணர்ந்து பேசுவீர்கள். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சியடைவீர்கள்.

**மீனம்** :செயலில் ஆற்றல் பிறக்கும். பணி-களை திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். விஷ ப்பிராணிகளால் பிரச்சினை வரலாம். கொடு க்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 08

01. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் ..................... வது உடம்புக்கு நல்லது
 1. உலவு 2. உளவு 3. உழவு

02. ஒரு பெட்டியில் 8 புத்தகங்கள் வைக்கலாம் எனில், 842 புத்தகங்களை வைக்கத் தேவையான பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

.....................................................

03. 2மீற்றர் துணியின் விலை ரூபா 120 எனில், 3மீ 75செமீ துணியின் விலை எவ்வளவு?

.....................................................

04. வீட்டில் இயற்கையாகவே காணப்படும் பிராணி
 1. கோழி 2. பாம்பு 3. பல்லி

05. தியானத்தின் இறுதிப் படிமுறை
 1. பிரார்த்தனை 2. மலர்வு 3. மனஉறுதி

06. காலாவதியான பொருட்களை
 1. மலிவான விலையில் விற்கலாம்
 2. விற்பனையாளர் பயன்படுத்தலாம்
 3. உடனடியாக அழிக்க வேண்டும்

பின்வரும் பாடலை வாசித்து 07, 08ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்

தாமரை மலர் பூத்துச் சிரிக்கும்
இலைமேல் நீர் முத்துக்கள் போன்று பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் குளத்தின் அழகு

07. பாடலில் எதனை முத்துக்கள் எனக் கூறப்பட்டுள்ளது?
 1. தாமரைப்பூ 2. நீரலை 3. இலை மேலுள்ள நீர்

08. பாடலிற்கு ஏற்ப இக்குளம் அழகாகத் தோன்றுவதன் காரணம்?
 1. தாமரைப்பூ பூத்துள்ளமையும் நீரலைகளின் மோதலும்
 2. தாமரைப் பூக்கள் பூத்துள்ளமையும் அழகான மீன்கள் காணப்பட்டமையும்
 3. சுத்தமான நீல நிற நீர் இருப்பதும் தாமரைப் பூக்கள் மலர்ந்துள்ளமையும்

09. பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.
 1. அதிகளவு மரங்களைக் கொண்ட இடம் ...................
 2. விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் சிகிச்சை ........................

10. சுபாவின் நிறையின் இரு மடங்கு நிறையுடையவர் அனுலா, அனுலாவின் அரை மடங்கு நிறை உடையவர் லவன். லவனை விட இரு மடங்கு நிறையுடையவர் பீமா. அனுலாவின் நிறை 30கி.கி எனின், பீமாவின் நிறை யாது?
 1. 15கி.கி 2. 20கி.கி 3. 30கி.கி

11. ஒரு தெருவில் 21 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கிடையிலான தூரம் 15மீ. எனின், முதல் மின் கம்பத்திற்கும் கடைசி மின் கம்பத்திற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

.....................................................

12. சமையலறையில் இரவில் கரப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வழி எது?
 1. கையால் பிடித்து அழித்தல் 2. மின்குமிழை ஒளிர விடுதல்
 3. பூச்சி மருந்து விசிறல் 4. பொறியுணவை வைத்தல்

13. ஒருவர் அமெரிக்க நாட்டில் பணிபுரிகிறார். இவருக்கான மாதச் சம்பளம் 800 அமெரிக்க டொலர்களாகும். அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமானம் ரூபா 120 எனில், இலங்கை நாணயத்தின் படி அவரது மாதச் சம்பளம் எவ்வளவு?

.....................................................

14. கொழும்பு பண்டாரநாயக்கா விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30மணிக்கு புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை வந்தடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தை சென்றடைந்த நேரம் என்ன?
 1. மு.ப 6.50 2. மு.ப 6.55 3. மு.ப 07.05

15. சதுவிடம் உள்ள பணத்தை விட நான்கு மடங்கு பணம் குருவிடம் உள்ளது. சதுவுக்கு ரூபா 150 கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாகும். இப்போது இருவரிடமும் உள்ள பணத்தொகை எவ்வளவு?

.....................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு






## வேணாம் காகம் அண்ணா!

அந்த கல்யாண சத்திரத்தில் விதவிதமான உணவு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. எந்த உணவை சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்துவிடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி.

அந்த நேரத்தில் தெருவோரமாக இருந்த மதில் மீது ஒரு காகம் அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியின் அருகே பறந்து வந்து அதனை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப்போனது.

காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது.

"காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். இங்கே தெருவில் நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர்களே... என் மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா?" என்று அன்போடு கேட்டது.

அதனைக் கேட்ட காகம், "எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகிறது. அதனால் உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடும்!" என்று கண்டிப்புடன் கூறியது.

"காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒரு வித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக் கொண்டால் அது என்ன பாடுபடும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர் பிச்சை கொடுங்களேன்!" என்று பரிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனது இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, "எலியே! உன்னைப் பார்த்த போது எப்படியாவது உன்னை சாப்பிட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது. உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிற போது அந்த எண்ணம் என் மனதைவிட்டு அகன்றுவிட்டது. நீ உன் சாதுர்யமான பேச்சினால் என் மனதினுள் இருக்கிற பாச உணர்ச்சியினைத் தட்டி எழுப்பிவிட்டாய். இனிமேல் நீ பயமில்லாமல் செல்லலாம்!" என்று கூறியபடி வேறு இரையைத் தேடிப் பறந்து சென்றது.

எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக் கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்து கொண்டது. அன்புக்கு இத்தனை பெரிய சக்தியிருப்பதையும், அது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டது. தானும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அது உறுதி பூண்டது.



**அன்பினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.**

**சிந்திக்க .. ..**

**நீ ஓடும் போது தோல்வி உன்னைத் துரத்துவதாக உணர்ந்தால் தொடர்ந்து ஓடு: நீ வெற்றிக்கு அருகாமையில் இருக்கிறாய் என்பதையே அது உணர்த்துகின்றது.**

## மலைமுரசு



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

## நல்ல பிள்ளை!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு, கிண்ணியா)



காலையிலே எழும்புவேன்,
 கடள்தனை வணங்குவேன்!
மாலையில் விளையாடுவேன்,
 மறந்து போக மாட்டேனே!

தாய் எனக்குக் கோயிலாம்,
 தந்தை சொல்லே மந்திரம்!
நோய் பிடித்திடாமலே
 நூறு வரையும் வாழுவேன்!

பாடசாலை செல்லுவேன்,
 பகலும் இரவும் படிப்பனே!
நாடகமும் நடித்து நான்,
 நல்ல பிள்ளை ஆகுவேன்!

அமுதம் போன்ற தமிழுடன்,
 ஆங்கிலமும் பயிலுவேன்!
நமது அயல் மொழியையும்,
 நான் படித்து மகிழ்வனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 3,4,5,4,6,$x$,6,8 என்னும் தரவுக் கூட்டத்தின் ஆராகம் 4 ஆகும். $x$ இன் பெறுமானத்தைக் காண்க.
02. சீரான கதியுடன் நீர் பாயும் குழாய் ஒன்றிலிருந்து 10 செக்கனில் 40 லீற்றர் நீர் வெளியேறுகின்றது. குழாயிலிருந்து நீர் பாயும் கதி லீற்றர் நிமிடத்தில் யாது?
03. P,Q என்பன 2 மூட்டற்ற தொடைகள் PUQ = {3,5,7,9,11} உம் P={3,9} உம் ஆகும். தொடை Q வை எழுதுக.
04. ஒரு பொருளை விற்கும் போது அதன் குறித்த விலையில் 8% கழிவு கொடுக்கப்படுகின்றது. ரூ.368 இற்கு விற்கப்படும் ஒரு பொருளின் குறித்த விலையைக் காண்க.
05. ஒரு குறித்த வேலையைச் செய்து முடிப்பதற்கு ஒரு மனிதன் 8 நாட்கள் எடுக்கின்றான் அத்தகைய இரு மனிதர்கள் 2 நாட்கள் வேலை செய்தால் இவ்வேலையில் என்ன பின்னத்தைச் செய்து முடிக்கலாம்?

**பகுதி . 02**

A,B ஆகிய இருவரும் 4:5 என்னும் விகிதத்திற்கு பணத்தை இட்டு ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தனர்.

*01. A ஆனவர் ரூ.20000 ஐ இட்டால் B இட்ட பணம் யாது?*

*02. ஆண்டின் இறுதியில் ரூ. 6000 இலாபம் கிடைக்கும் அதே வேளை அதில் 10% ஆனது மறுபடியும் வியாபாரத்திற்கு இடப்பட்டது. மீதிப் பணம் இருவரும் இட்ட பணத்தின் விகிதத்திற்கேற்ப பகிரப்பட்டதெனின் Aயிற்கும் Bயிற்கும் கிடைத்த பணத் தொகையை தனித்தனியே காண்க.*

*03.பெரிய பிரித்தானியாவில் இருக்கும் மோகனுக்கு அவருடைய தந்தையார் 340 யூரோ பணத்தை அனுப்பினார். அதன் பெறுமானம் எத்தனை ஸ்ரேலிங் பவுன் (1யூரோ 145 இலங்கை ரூபாய் எனவும் 1ஸ்ரேலிங் பவுன் 170 இலங்கை ரூபாய் எனக் கொள்க.)*

## பாடம் : வரலாறு

01. துட்டகைமுனு அரசகுமாரர் நாட்டைப் பகைவர்களிடமிருந்து விடுவிக்கும் பணியை வெற்றிகரமாகத் தேவையான பின்னணியை அமைப்பதில் திட்டத்துடனும் தொலைநோக்குடனும் செய்யப்பட்டு மிகுந்த சேவையை ஆற்றியவர்.
   (1) சகோதரராகிய சத்தாதீச அரசகுமாரர்.
   (2) பதினாறு மகா இராட்சதர்கள் உட்பட்ட படைத் தலைவர்கள்.
   (3) அறிவுரையை வழங்குவதன் மூலம் பிக்குகள்.
   (4) தந்தையாராகிய காவன்தீச அரசர்.
02. தமது கீழைத்தேயத் தலைமையகமாக பத்தாவியாவைப் பின்வரும் எவ்வினம் தெரிந்தெடுத்தது?
   (1) ஸ்பானியர் (2) ஒல்லாந்தர்
   (3) போர்த்துக்கேயர் (4) பிரெஞ்சு
03. இயற்கைச் சிறுகுன்றை முற்றாக மூடுமாறு அமைக்கப்பட்ட பொரிய பௌத்த விகாரை
   (1) பாமியன் (2) போரோபுதூர் (3) அங்கர் வாற் (4) சுவெதகொன்
04. நான்காம் புத்த அவையை நடத்துவதற்கு அனுசரணையளித்த அரசர் யார்?
   (1) கைபர் (2) கோமல் (3) போலன் (4) மக்ரான்
05. புராதன இந்தியாவில் இருந்த விஜயநகர பேரரசு பற்றிய கீழ்வரும் கூற்றுக்களுள் சரியானது?
   1 . இந்தியா முழுதும் தனது ஆதிக்கத்தை செலுத்தினார்
   2. தென்னிந்தியாவில் இந்து சமயத்தை பாதுகாத்ததுடன் இஸ்லாம் மதம் பரவுவதையும் தடுத்தனர்.
   3. மௌரிய வம்சத்தவர்களுடன் இணைந்து இந்தியாவுக்கு வெளியேயும் தமது அதிகாரத்தினை செலுத்தினர்.
   4. கலைகளை விருத்தியுற செய்ய இந்தியாவிலுள்ள வல்லுனர்களை தென்கீழ் ஆசிய நாடுகளுக்கு அனுப்பினர்.

**ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்**
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## பாடம் : பௌதீகவியல்


*01. பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?*
   (1) நேரோட்டத்தினை ஆடலோட்டமாக மாற்றல் சீராக்கல் ஆகம்.
   (2) அரையலைச் சீராக்களில் குறைந்தது இரண்டு இருவாயிகள் பயன்படுத்தப்படுகின்றன.
   (3) நிலைமாற்றிகளைப் பயன்படுத்தி ஆடலோட்டதினை சீராக்க முடியும்.
   (4) கொள்ளளவி ஒன்றினை பயன்படுத்தி முழு அலை சீராக்கலுக்குட்பட்ட அலையொன்றின் ஒப்பமாக்க முடியும்.

*02.* காந்தப்புலத்தில் மின்னோட்டத்தை காவும் கடத்திக் கம்பியென்றின் காந்தப்புலத்தின் திசைக்கு செங்குத்தாக வைக்கப்பட்டுள்ளது எனின் கம்பியில் தொழிற்படும் விசை யாது?
   (1) மின்னோட்டத்தின் திசையில் இருக்கும்.
   (2) மின்னோட்டத்தின் திசைக்கு எதிர் திசையில் இருக்கும்.
   (3) காந்தப்புலத்தின் திசைக்கு சமாந்தரமாக இருக்கும்.
   (4) காந்தப்புலத்தின் திசைக்கும் மின்னோட்டத்தின் திசைக்கும் செங்குத்தாக இருக்கும்.

*03.* சில வெப்பமானிகளில் இரசத்திற்கு பதிலாக அற்ககோல் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பிரதான அனுகூலம்.
   (1) குறைந்த வெப்பநிலைகளை அளக்கத்தக்கதாக இருத்தல்.
   (2) கூடிய வெப்பநிலைகளை அளக்கத்தக்கதாக இருத்தல்.
   (3) உள் நாட்டில் உற்பத்தி செய்யத்தக்கதாக இருத்தல்.
   (4) நிறை குறைந்ததாக இருத்தல்.

*04.* பின்வருவனவற்றுள் எளிய பொறியொன்றின் பொறிமுறை நயத்தை தருவது?
   (1) சுமை / எத்தனம்
   (2) எத்தனம் அசைந்த தூரம் / சுமை அசைந்த தூரம்
   (3) சுமை X எத்தனம்
   (4) எத்தனம் அசைந்த தூரம் X சுமை அசைந்த தூரம்

*05.* ஆடலோட்ட தைனமோவின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்னோட்டத்தை யாதாயினும் ஒரு துனைக் கருவியினூடாக அனுப்பும் போது மின்னோட்டத்தில் நடைபெறும் மாறல் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது. அத்துணைக் கருவி யாதாக இருத்தல் வேண்டும்.




   (1) தடையி
   (2) நிலைமாற்றி
   (3) இருவாயி
   (4) கொள்ளளவி

**விஞ்ஞானம் (பௌதீகவியல்)**
**பல்தேர்வு**
ஆசிரியர் . பொன்னுத்துரை தவசிதன் BSC
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### தொடர் மொழிக்கு ஒரு மொழி

12. தற்பவம் - ஆரியத்துக்குரிய சிறப்பெழுத்துக்களுள் தமிழ் எழுத்துக்களாக விகாரப்பட்டு தமிழில் வழங்கும் வடசொல்.
13. தேவராளன் - வேண்டிய போது தெய்வம் ஏறப்பெற்று ஆடுவோன்.
14. நாளங்காடி - காலையிலும் பகலிலும் கூடும் சந்தை.
15. நிறை மொழி - அருளிக் கூறினும் வெருண்ட கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் அருள்மொழி.
16. நூலகம் - வாசிப்பதற்கு நூல்களை தொகுத்து வைத்திருக்கும் இடம்.
17. நொது மலர் - ஆயுள் முழுதும் பிரம்மச்சரியம் காத்து வாழ்வோன்.
18. பதுமநிதி - தாமரை உருவிலான திரவியமளிக்கும் பொருள் சங்க நிதியின் ஆயிரம் நிதி.
19. பால் வீதி - வானத்தின் ஒரு புறத்திலே வெண்ணிற நீட்சியாகத் தோன்றும் நட்சத்திரத்திரத்தின் ஒளி.
20. புனைந்துரை - இல்லது நல்லதைப் புனைந்து கூறல்.
21. பொதுவியல் - பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து வகை.
22. பொன் விழா - ஐம்பதாவது ஆண்டிறுதியில் எடுக்கப்படும் விழா.
23. போலி - ஒன்று போல இருக்கும் வேறொன்று.
24. பௌராணிகம் - புராணக்கதைகளை சுவைப்பட பிரசங்கம் செய்வோன்.
25. மந்திரம் - நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,

## Grammar

**Fill in the blanks with the correct forms of 'be' in the following passage. You may have to use a word more then once.**

(1)............ a butterfly. can you guess who my friend is? He (2)........... also a butterfly. We fly from flower to flower. They (3).............. our source of food. Although we (4)........... butterflies now, at an earlier stage we (5)............ caterpillar on the same plant. At that time, my friend (6)............ a little longer than I He (7)............... very Proud of it. He once laughed at me and said, " Look at your self. You (8).............. shorter then I" I (9)............... a bit hurt. "No, I (10)............... not short", I argued.

In time both of us wings and beautiful bodies, but now my friend (11)................ more beautiful then I.

| am | is | are | was | were |
|---|---|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுமானத்தி...

உடனடியாக பிரயோகத்திற்கு வரும்வகையில் இக்கட்டளை இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், திருக்கோணேஸ்வரத்தின் சுற்றயலில் அனுமதியற்ற கட்டுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ், பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட, திருக்கோணே- ஸ்வரர் கோவிலுட்பட்ட பாதுகாப்பு பிரதேசத்தில் 372 ஏக்கர் பரப்பளவான நிலம் தமக்கு உரித்தானது எனத் தொல்பொருட் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எச்.ஏ சுமணதாஸ மேலும் தெரிவிக்கையில், இந்தக் கோவில் வளாகத்தில் இருக்கின்ற கட்டுமானங்களில் 99 சதவீதமானவை, சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும், தற்போது நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடமொன்று மிகவும் இரகசியமான முறையில் கட்டப்- படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு இரகசியமாகக் கட்டப்படுவதாகத் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே இக்கட்டுமானப் பணிகளுட்பட அனைத்துக் கட்டுமானப் பணிகளையும் நிறுத்தும் கட்டளை இடப்பட்டுள்ளது எனத் தெரிகின்றது.

## ஐ.எஸ். ஆதர....

அடிப்படையிலேயே இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முகம்மட் சிராஜுதீன் என்ற இளைஞர் நேரலையின் மூலமாகவும், சமூக வலைத்தளங்களின் மூலமாகவும் இந்தியாவில் இளையோரைச் சேர்த்து ஐஎஸ் அமைப்பிற்கு அனுப்பும் நடவடிக்கைககளை முன்னெடுத்திருந்தார் என்ற சந்தேகத்தில் அண்மையில் கைதாகியிருந்தார். அவர தொடர்புகளைப் பரீட்சித்த போது புனேயைச் சேர்ந்த இளவயதுப் பெண்ணொருவரின் வலைத்தளத் தொடர்புகள் இலங்கையிலுள்ள ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் முகவரொருவரின் ஊடகவும் உருவாகியிருப்பதாக இந்தியக் காவல்துறையை மேற்கோள் காட்டி ''டைம்ஸ் ஒவ் இந்தியா'' தெரிவித்துள்ளது.

பராயமடையாத மேற்படி பெண் குழந்தை ஐஎஸ் பயங்கரவாத விடயங்கள் தொடர்பாக இலங்கை உட்பட துபாய், சவூதி, பிலிப்பைன்ஸ், கென்யா, ஐரோப்பிய நாடுகளிற் சில ஆகியவற்றில் உள்ளவர்களுடன் நிரந்தரத் தொடர்பைப் பேணிவருவது கண்டுபிடிக்கப்பட்டள்ளது.

குறித்த பெண் குழந்தை தீவிர காவல்துறைக் கண்காணிப்பிற்கு உட்பட்டிருப்பதாகக் காவல்துறை அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஸ்ரீலங்காவில் இருந்து ஐஎஸ் தீவிரவாதிகளுடன் இணைந்த ஒருவர் சிரிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து, மேலும் எண்மர் ஸ்ரீலங்காவில் இருந்து தீவிரவாதிகளுடன் இணைந்தமை தொடர்பாக ஐயம் வெளியிடப் பட்டிருத்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஐஎஸ் தீவிரவாதத்திற்கு ஆதரவானவருகள் ஸ்ரீலங்காவில் வசிப் பதும், அவர்கள் அத்தீவிரவாதத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதும் தெரியவந்துள்ளது.

## பாலியல் இம்சைச்...

வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 14ம் திகதி திருகோணமலை திரியாய் பிரதேசத்தில் வீட்டிலிருந்து கோயிலுக்குச் சென்ற பதினைந்து வயதான பாடசாலை மாணவியைத் தனது இச்சைக்குப் பலியாக்க முயன்ற குற்றச்சாட்டின் பேரில் திரியாய் தமிழ்ப் பாடசாலையின் காவலாளியைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

மாணவியைக் காட்டுப்பகுதிக்குக் கடத்திச் சென்றிருந்த வேளையில் தகவலை அறிந்த ஊர் மக்களால் இக்காவலாளி பிடிக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் இவ் இம்சைச் சந்தேகநபர் காவல்துறையிடம் கையளிக்கப்பட்டதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர். மேலும் குறித்த நபர் ஏற்கனவே திருமணமாகி மூன்று பிள்ளைகளின் தகப்பனாரான 28 வயதான, புல்மோட்டை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சாஹிபு நசுர்தீன் என மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறானவர்களைத் தொடர்ந்தும் பாடசாலைச் சேவையில் வைத்திருப்பது மிகவும் ஆபத்தானது எனத் தெரிவித்துள்ள இரா.ஸ்ரீஞானே- ஸ்வரன், கிழக்கின் நீதித்துறை தவிர்ந்த ஏனைய துறைகளில் அரசியல் தலையீடுகள் ஊறிக்- கிடப்பதால் இந்தப் பிரச்சனையில் எதுவும் நிகழக்கூடிய வாய்ப்புள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சர் தனது தனிப்பட்ட கண்காணிப்பின் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், குறித்த நபருக்கு எதிராகச் சந்தேகம் தோன்றியுள்ளதால் அவரைப் பாடசாலைச் சேவையில் இனி எப்போதும் சேர்த்துக் கொள்ளமலிருக்க கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றும் ஸ்ரீஞானேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 15ம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 22ம் திகதி வரை விளக்கமறியலில் இடும்படி திருகோணமலை நீதிமன்ற நீதவான் டி.சரவணராஜா ஆணையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### செய்தித் துளிகள்

#### கன்னியா அரசினர் தமிழ்ப் பாடசாலையின் "இராவண தேசம்" வெளியீடு

கன்னியா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் " இராவண தேசம் " சஞ்சிகை வெளியீடும், ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று 18ம் திகதி நடைபெற்றது



## புனானையில்...

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக குற்றம் - சாட்டியிருந்தார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் இனப்பரம்பலை இல்லாதொழிக்கும் வகையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டே வந்தன.

வடக்கு, கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களாக இருக்கக்கூடாது என்பதற்காகவே திட்டமிட்ட வகையில் இத்தகைய குடியேற்றங்கள் மேற்கொள்ளப் -பட்டன.

இதுவே இனப்பிரச்சினை உச்சம் பெறுவதற்கு முக்கிய காரணியாக அமைந்திருந்தது.

வடக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னரான கடந்த ஐந்து ஆண்டுகாலங்களில் புதிதாக 18 விகாரைகள் அமைக்கப் -பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டு வரை வடக்கு மாகாணத்தில் 29 விகாரைகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளன.

தமிழ் மக்கள் வாழும் எந்தவொரு பகுதியிலும் அவர்களுக்குரிய நிலங்களில் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் எவையும் நடைபெறாது என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியிருக் -கின்றார்.

உண்மையிலேயே அமைச்சரின் இத்தகைய கருத்து வரவேற்கத் - தக்கதாகும்.

இதேபோன்ற கருத்திலும் செயற்பாட்டிலும் சிங்கள தலைமைகள் ஈடுபடுமானால் நாட்டில் தமிழ், சிங்கள மக்களிடையே எந்தவொரு விரிசல் நிலையும் ஏற்படமாட்டாது.

இதுவரை காலம் நடந்த தவறுகளை திருத்தி இனியாவது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய அரசாங்கம் செயற்படவேண்டும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இனியும் வடக்கு, கிழக்கில் இடம்பெறாது என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### செய்தித் துளிகள்

#### ஜப்பானின் அனல்மின் நிலையம் சம்பூரில்

இந்திய அனல் மின்நிலையத்தைத் தொடர்ந்து சம்பூரில் ஜப்பான் அமைக்க -விருக்கும் அனல் மின்நிலையத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனல்மின்நிலையத்தை அமைக்கும் பணிகள் மிகவிரைவில் ஆரம்பமாக- வுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்திய அனல் மின்நிலையத்திற்கு 514 ஏக்கர் சம்பூர் நிலம் ஒதுக்கப்பட்டள்ள நிலையில் மேலும் 515 ஏக்கர் நிலம் ஜப்பானிய அனல் மின்நிலையத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## திருமலையிலிருந்து...

இருந்து நிலக்கரியை வினியோகிப்ப - தற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இருந்து நாளொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட பாரஊர்திகளில் நிலக்கரி போக்குவரவு நடைபெற்றதாக கடந்த ஒக்டோபர் மாதத்தில் போக்குவரவு அமைச்சர் தெரிவித்திருந்ததுடன் அப்போக்கு- வரவானது மிகச் செலவானது என்பதையும் அடிக்கோடிட்டிருந்தார்.

நிலக்கரிப் போக்குவரவிற்குத் தொடருந்துகளைப் பயன்படுத்துவது சிறந்தது என்றும், செலவு குறைவானது என்பதும் அமைச்சருக்கு முன்நிலைப் படுத்தப்பட்டதை அடுத்து நிலக்கரிப் போக்குவரவிற்கு தொடருந்துகளை பாவிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்திற்குத் தருவிக்கப்படும் நிலக்கரி களஞ்சியப் படுத்தப்பட்டு புத்தளம் மற்றும் மஹாவ தொடருந்து நிலையங்களுக்கு போக்குவரவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொல்லப்பட்ட...

நிமலராஜன், தேவகுமார் ஆகியோரது கொலைகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கத் தயாராகி வருவதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

இவர்களது கொலைகள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஊடகத்துறை அமைச்சரால் காவல்துறைக்கு அறிவிக்கப் - பட்டுள்ளதாகக் கசிந்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கிழக்கின் தமிழ் ஊடக அமைப்புக்கள் அமைதி காத்து வருவதாகவும், தமிழ் ஊடகவிய- லாளர்களின் படுகொலை விசாரணைகள் தொடர்பாக எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கத் தயங்குவதாகவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## குறும்பட...

எனும் காணொளி பாடலும் வெளியிடப்படவுள்ளன .

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த கலைஞர்களின் கூட்டணியானது "ர்நயசவ டீசநயமநசள நுவெநசவயைெஅநவெ" எனும் நாமத்தின் கீழ் தமது படைப்புகளை வெளியிட்டு அனைவரின் மத்தியிலும் வரவேற்பை பெற்று வருகின்றனர் .

ஏற்கனவே இந்த அணியானது இரண்டு நிகழ்வுகளை 2013 இல் பிரம்மாண்டமாக நடத்தி தமது படைப்புகளை வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது .

## அமெரிக்கப்...

வந்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளரின் ஆலோசகர் தோமஸ் செனன், அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் அதுல் கேஸா ஆகியோர் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்டின் பெர்ணான்டோ கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஏ.புஸ்பகுமார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கணனி வடிவமைப்பாளருக்கு வேலைவாய்ப்பு
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....




கிழக்கில் கல்வி இலவசம், வாழ்க்கைச்செலவு அதிகம். ஆனால் மேற்கில் கல்விக்கு பணம், வாழ்க்கை செலவு குறைவு மற்றும் முதலாளித்துவ உல்லாசம். கடைசியில் கிழக்கு ஜெர்மனியின் மக்கள் தொகை பெருமளவில் குறைந்து போனதாக தரவுகள் சுட்டிக் காட்டின. மூன்று மில்லியன் மக்கள் கிழக்கு ஜெர்மனை விட்டு ஓடியே போய் விட்டார்களாம்.

பேர்ளின் சுவர் என்றால் என்ன என்று யாரும் உங்களிடம் கேட்டால், நீங்கள் சொல்ல வேண்டியது இப்படித்தான் . 155km. Electric contact or signal fencing: 127.5km. Observation towers: 302. Dog runs: 259. Bunkers: 20, guarded by more than 11,000 soldiers. என்னதான் இப்படி இருந்தாலும் ஜெர்மனியர்களின் ஒத்திசைவே அவர்களை இறுதியில் தனித்தேசமாகவே மீண்டும் உயிர்த்தெழ வைத்தது என்றால் மிகையாகாது. இறுதியில் கம்மியுனிசம் வீழ்ந்த பொழுது பேர்ளின் சுவரும் தகர்ந்து போனது. ஜெர்மன் தேசம் புத்துயிர் பெற்று எழுந்து கொண்டது. சுவர் தகர்ந்த ஒருநாளில் "Only today is the war really over".

அண்மையில் கூட சுவரை வைத்து ஒரு சினிமாப்படம் எடுத்திருந்தார்கள். இந்த சுவர்கள் வரலாற்றில் சீனப் பெருசுவர் முக்கியமானது. அடுத்தது இந்த பேர்ளின் சுவர்தான். அமேரிக்கா இந்த சம்பவத்திற்குள் எங்கே காணவில்லை என்று மட்டும் கேட்க வேண்டாம். 1963 இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி John F.Kennedy கூட பெர்லினுக்கு சென்று அந்த சுவரை பார்வையிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சுவர் எழுப்பியது என்னவோ இரசிய ஆதரவு கிழக்கு ஜெர்மன் தான். ஆனால் உள்ளே அரங்கேற்றப் பட்ட நாடகங்கள் பெரும்பாலானவை அமெரிக்காவினுடையது. அதாவது யாரோ பற்றவைத்த நெருப்பில், பேர்ளின் சுவர் ஓரம் நன்றாக குளிர் காய்ந்தது அமேரிக்கா.

அந்த சுவர்களின் நினைவிடங்கள் பல இன்றும் இருக்கின்றன. சுவரோவியங்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. விரும்பியவர்கள் தேடிப்பார்த்துக் கொள்ளுங்கள். பல ஆவணப்படங்கள் உட்பட, வரலாற்றை உருக்கமாகச் சொல்லும் பல திரைப்படங்கள் கூட இருக்கின்றன. (The Spy Who Came in from the Cold, Introduction, The Tunnel.......) மீண்டும் நாம் பனிக் கூதலுடன் அமெரிக்காவின் சள்ளைக்குள் நுழையலாம்.

கொட்டுகிற மழையில் சூடாக ஒரு இஞ்சித் தேநீர் ஒன்றை உறிஞ்சிக்கொண்டு நாட்டு நடப்புகளை ஒருதரம் பத்திரிகைகளிலோ அல்லது இணைய தளங்களிலோ பார்த்துக் கொண்டு சுவாரசியமாக அவற்றை அலசி ஆராய நல்ல நண்பர்கள் இருந்தால், அன்றைய பொழுது என்றும் வரமானது தான். உள் வீட்டுக்குள் இருந்து "ம்ம்ம்ம் இவர் இதெல்லாம் அலசி ஆராய்ந்து என்னத்த கிழிக்கப்போகிறார்?" என்று ஒரு குரல் முணுமுணுத்தாலும் கேட்டும் கேட்காதது போல இருக்கும் பலர்தான் இங்கே அதிகம். அவர்களிடம் இருப்பது "எனக்கும் இந்த விடயம் தெரிந்து இருக்க வேண்டும்" என்கிற ஒரு உச்ச பட்ச அவா. அதுதான் அவர்களை சமூகத்தின் முன் கொண்டு போய் முன்னிறுத்துகிறது. அதில் பொய்யும் இல்லை, தவறும் இல்லை.

இன்றைய சந்ததியில் பிழை சொல்ல முடியாது, ஆனாலும் உலக நாடுகளின் அரசியலையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதில் ஒப்பீட்டளவில் ஆர்வம் குறைவு என்று சொன்னாலும் அது பொய்யில்லை. பெற்றோர்கள் இதனை கவனிக்க வேண்டியது அவசியம். இன்றைய கால கட்டங்களில் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட முடியாது...

சரி, இதனை ஏன் இங்கே சொன்னேன் என்றால், உலகின் எந்த போர் பற்றியும், அல்லது வரலாறு பற்றியும் கூட தெளிவாக அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர முடியும். ஆனால், இந்த மத்திய கிழக்கு ஆசிய நாடுகளின் வரலாறு, அரசியல் என்றாலும் சரி, போர் பிணக்குகள் என்றாலும் சரி, அவை ஒரு சாம்பார்தான். பிரித்தறிய முடியாது. கரைகண்டு இதுதான் பிரச்சனை என்று எந்த முடிவுக்கும் வர முடியாது. இப்படியான நிலையில் இஞ்சித் தேநீர் ஒன்றுதான் வழி...

நாம் 1945 -1989 வரையான பனிப்போர்களில் அமேரிக்கா பற்றி சுருக்கமாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம் அல்லவா? அதற்குள் அடங்காத ஒரு விடயம்.

# நிகழ்வுகள்

## மகுடம் அனுசரணையில்
## விவரண குறும்பட திரையிடல்

மகுடம் கலை இலக்கிய வட்டமும், மட்/ அரங்க ஆய்வு கூடமும் இணைந்து நடாத்திய கோம்பை எஸ்.அன்வரின் "**யாதும்**" விவரண குறும்பட திரையிடலும், கலந்துரையாடலும் கடந்த ஞாயிறு மாலை நான்கு மணிக்கு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியை சித்ரலேகா, கலாநிதி எஸ்.சந்திரசேகரம், விரிவுரையாளர் பாரதி கெனடி, பிரபல எழுத்தாளர்கள் ஜுனைதா செரிப், எஸ்.எல்.எம்.ஹனிபா கலாபூசனம் எஸ்.எதிர்மன்ன சிங்கம், கலாபூசனம் யோகா துரையப்பா செல்லப்பா, ஆசிரியர் இரா.சிவலிங்கம், கவிஞர்கள் பாவலர் சாந்திமுகைதீன், ரீ.எல்.ஜவ்பர் கான், காகம் இதிரீஸ், நளீம் என பல இலக்கிய பிரமுகர்களும் மட்டக்களப்பின் பல புத்திஜீவிகளும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பார்வையாளர்களின் கருத்துகளுக்கு கோம்பை அன்வர் அவர்கள் பல விளக்கங்களை அளித்தார்.

நிகழ்வின் இறுதியில் யாதும் விவரண திரைப்பட இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டன. இறுதியில் அன்வர் அவர்களுக்கு மகுடம் பிரமிள் சிறப்பிதழ் ஆசிரியர் வி.மைக்கல் கொலின் மூலம் வழங்கிவைக்கப்பட்டது.





## மூத்த மகன் காந்தி ஐயாவிற்கு விழா

சேனையூர் நிருபர்

திருகோணமலையின் மூத்த மகன் சமூகத்தொண்டன் காந்தி ஐயாவின் 97வது பிறந்தநாள் நிகழ்வு அசல் சமூக நோக்குனர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 19.12.2015 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு திருகோணமலை முத்துக்குமார சுவாமி தேவஸ்தானத்தின் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காந்தி ஐயா கௌரவிக்கப்படுவதுடன் சிறார்களின் கலைநிகழ்வும் இடம்பெற இருக்கின்றது. காந்தி ஐயாவின் சேவையை பாராட்டி சிறப்புரைகள் இடம் பெறுவதுடன் அவரை பற்றிய கையேடும் நிகழ்வில் வழங்கப்பட இருக்கின்றது.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியாலாளர்கள் என பலர் கலந்து கொள்ள இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கதிரைகள் அன்பளிப்பு

முள்ளிப்பொத்தானை நிருபர்



கிண்ணியா பட்டியாநூர் விவசாயா சம்மேளனத்தினால் கிண்ணியா கமநல சேவை நிலையத்திற்கு கம நல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எப்.எம்.ஷாபி அவர்கள் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.




மலைமுரசின் சார்பில்
அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும்
புது வருட நல்வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## முதல் தடவையாக அலுவலக ஹொக்கி



உலகப் புகழ்பெற்ற ஹேர்மன் மில்லர் கதிரைகள் மற்றும் மேசைகள் ஆகியவற்றை இலங்கையில் அறிமுகம் செய்து விநியோகிக்கும் துயுவு ஹோல்டிங்ஸ், தனது முதலாவது ஏரன் ஹொக்கி போட்டித் தொடரை இலங்கையில் முன்னெடுத்திருந்தது.

இது, இலங்கையின் கூட்டாண்மை விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் முதற் தடவையாக இடம்பெற்றிருந்தது. இந்த போட்டி நிகழ்வு, மருதானை, எக்ஸ்பேர்ட் சிட்டி பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. இதில், புகழ்பெற்ற வியாபார நிறுவனங்கள் பதின்நான்கின் அணிகள் பங்கேற்றிருந்தன.

ஏரன் ஹொக்கி என்பது, "அலுவலக ஹொக்கி" விளையாட்டில் மற்றுமொரு சாதனை அம்சமாக அமைந்துள்ளது. இந்த விளையாட்டுக்காக விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட உள்ளக விளையாட்டுத் திடலில், இந்தப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஓர் அணியில் ஐவர் உள்ளடங்கியிருந்தனர். ஐஸ் ஹொக்கி விளையாட்டில் பயன்படுத்தப்படும் ஹொக்கி ஸ்டிக்களுக்கு ஒப்பான ஹொக்கி ஸ்டிக்குகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

# விளையாட்டு முரசு



## தொழில்சார் குத்துச்சண்டை கோதா

### இலங்கையில் முதன் முதலாக

இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதலாவது தொழில்சார் குத்துச்சண்டை கோதா ரத்மலானை ஸ்டெய்ன் கலையகத்தில் இன்று (19.12.2015) நடைபெறவுள்ளது.

வரையறுக்கப்பட்ட கெப்பிடல் மஹாராஜா நிறுவனத்தின் செம்பியன் நெட்வர்க் சார்பாக ஸ்போர்ட்ஸ் பெஸ்ட் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கோதா தொடர்பான ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள் சில நேற்றைய தினத்தில் முன்னெடுக்கப்பட்டன.


உலக குத்துச்சண்டை சங்கத்தின் கண்காணிப்பின் கீழ் நடைபெறும் இந்தக் கோதாவில் ஜப்பான், பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி உலக நிரல்படுத்தலில் முன்னிலை வகிக்கும் வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

இதற்கான ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள் சில நீர்கொழும்பு, சீதுவ ஆகிய நகரங்களைப் பிரதானமாகக் கொண்டு நேற்று காலை நடத்தப்பட்டன.

இலங்கையில் நடைபெறும் முதலாவது தொழில்சார் குத்துச்சண்டை கோதா தொடர்பான செயற்றிட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. நம் நாட்டு குத்துச்சண்டைப் பிரியர்களுக்கு புதிய அனுபவத்தை ஏற்படுத்தும் இந்தக் கோதாவில் 46 கிலோகிராம் அடம் வெய்ட் பிரிவில் உலக சாம்பியனான ஜப்பானின் நாவோ இகயாமா பிலிப்பைன்ஸின் ஜூஜியாத் நகோவாவுடன் Jujeath Nagaowa மோதவுள்ளார்.

டெனிஸ்

## விருதுகளை தட்டிச் சென்றார் - செரீனா





அமெரிக்க டெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை தட்டிச் சென்றுள்ளார். இந்த வருடம் அசைக்க முடியாத வெற்றிகளைப் பெற்ற செரீனா ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ரேடட் (Sport Illustrated) இந்த வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பெற்றுள்ளார்.

32 ஆண்டுகளுக்குப் பிறகு வீராங்கனை ஒருவர் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை பெறுவது இதுவே முதன்முறையாகும். கடைசியாக 1983 ஆம் ஆண்டு மேரி டெக்கர் இந்த விருதை பெற்றிருந்தார்.

இந்த வருடத்தில் செரீனா, தான் சந்தித்த 56 போட்டிகளில் 53 இல் வெற்றி வாகை சூடியுள்ளார். இந்த வருடம் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அவுஸ்திரேலியா, பிரெஞ்சு மற்றும் விம்பிள்டன் ஆகியவற்றில் கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை கைப்பற்றினார். தற்போது 34 வயதானாலும் தன்னுடைய தனித் திறமையால் டெனிஸ் தரவரிசையில் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறார்.

T 20

## 2016 இற்கான T20 அட்டவணை வெளியிடப்பட்டது

2016 மார்ச் 8ம் திகதி முதல் ஏப்ரல் 3ம் திகதி வரை, T20 உலகக்கோப்பை போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற அணிகள் ஒரு பிரிவிலும் தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், இலங்கை ஆகிய அணிகள் மற்றொரு பிரிவிலும் விளையாடுகின்றன. இரண்டு பிரிவுகளிலும் தலா ஒரு அணி பிறகு சேர்க்கப்படும். இந்த இரு அணிகளும் தகுதிச்சுற்று வழியாகத் தேர்ந்தெடுக்கப்படும். போட்டியில் ஆடுகின்ற 10 அணிகளும் சுப்பர் 10 என்கிற ஆரம்பச் சுற்றில் விளையாடும்.

அரையிறுதிப் போட்டிகள் டில்லி மற்றும் மும்பையில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது. சென்னைக்கு மகளிர் T20 உலகக்கோப்பையின் 4 போட்டிகளை நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## நீரைச் சுத்திகரிக்க வேண்டும்

ஒலிம்பிக்

அடுத்தாண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில், நீர் விளையாட்டுப் போட்டிகளில் முக்கியமானதான படகோட்டப் போட்டிகளுக்கான நீர்ப்பகுதிகளில், நீரின் தரம் இன்னமும் அதிகரிக்க வேண்டுமென அறிவிக்கப்படுகிறது. 2016ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள், பிரேசிலின் றியோ டி ஜெனீரோவில் இடம்பெறவுள்ள நிலையிலேயே, இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கட்

## அரசியல் தலையீட்டால் அணி கொல்லப்படுகிறது



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையில் காணப்படும் அதிகபட்ச அரசியல் காரணமாக, அங்குள்ள கிரிக்கெட் கொல்லப்படுவதாக, அவ்வணியின் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார். சகலதுறை வீரரான டுவைன் பிராவோ, கடந்தாண்டு இந்தியாவில் இடம்பெற்ற தொடரிலிருந்து, ஊதியப் பிரச்சினை தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகள் அணி விலகும் போது அணித்தலைவராக இருந்து, அதை வழிநடத்தியதைத் தொடர்ந்து, அவ்வணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் சேர்க்கப்படுவதில்லை. ஆனால், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிக் குழாமில், இன்னமும் சேர்க்கப்படுகிறார்.

## ஒரு வருட காலத்திற்கு பந்து வீசத் தடை



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரரும், சுழற்பந்து வீச்சாளருமான சாமுவேல்ஸ், கடந்த மாதம் இலங்கைக்கு எதிரான டெஸ்டின் போது சந்தேகம் அளிக்கும் வகையில் பந்து வீசிய புகாரில் சிக்கினார்.

இது போன்ற சர்ச்சையில் 3-வது முறையாக சிக்கிய அவரது பந்து வீச்சு, அவுஸ்திரேலியாவில் உள்ள பரிசோதனை மையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதில் அவரது பந்து வீச்சு விதிமுறைக்கு புறம்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதால், அவர் ஓராண்டு பந்து வீச ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

## ஒரு வருட காலத்திற்கு

இந்திய கிரிக்கெட் வீரரான தினேஷ் கார்த்திக், ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகலை காதலித்து மணந்துள்ளார். இந்நிலையில் ஒரு லைப் ஸ்டைல் பத்திரிக்கையில் நிருபர் ஒருவர் தினேஷ் கார்த்திக்கை கவர்ச்சியற்றவர் என்றும், தீபிகாவுக்கு பொறுத்தமற்றவர் எனவும் எழுதியுள்ளார். இதற்கு டுவிட்டரில், எனது கணவர் ஹொட் என குறிப்பிட்டுள்ளார் தீபிகா.

## சென்னை தெரிவு கொல்கத்தா வெளியேற்றம்

இந்தியாவின் தொழில்முறைக் கால்பந்தாட்டத் தொடரான இந்தியன் சுப்பர் லீக்கின் இறுதிப் போட்டிக்கு, சென்னையின் கால்பந்தாட்டக் கழகம் தகுதிபெற்றுள்ளது. நடப்புச் சம்பியன்களான அத்லெட்டிகோ டி கொல்கத்தாவைத் தோற்கடித்தே அவ்வணி, இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணை -கிழக்கு ஊடக அமைப்புக்கள் அமைதி-




**கொ**ல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் விசாரணைகள் தொடர்பாகக் கிழக்கின் ஊடக அமைப்புக்கள் மௌனம் சாதித்து வருவதாக விசனம் வெளியிடப் - பட்டுள்ளது.

தெற்கில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் கொலைகளுக்கான விசாரணைகள் துரிதமாக நடைபெற்றுவரும் வேளையில் வடக்கிலும் கிழக்கிலும் கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பாக உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதற்கான சாத்தியங்கள் இல்லாமலிருந்தன.

அதனைக் கருத்திற் கொண்டு தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுக்குமாறு கோரிக்கைகள் வடக்கிலிருந்து எழுப்பப்பட்டது.

வடக்கிற்கு வருகை தந்திருந்த அமெரிக்க இராசாங்கப் பிரதிநிதி சமந்தா பவர் அம்மையாரிடமும், ஸ்ரீலங்காவின் சனாதிபதி மற்றும் பிரதமரிடமும் யாழ் ஊடக மையம் இக் கோரிக்கையை விடுத்திருந்தது.

இதற்கமைய தற்போது தராகி சிவராம், நடேசன், சுகிர்தராஜன்,............ 17

## — குறும்பட விழா---




**தி**ருகோணமலை இளம் கலைஞர் - களின் முயற்சியில் உருவான படைப்புகளின் வெளியீட்டு விழா இன்று (19) மாலை 4.00 மணிக்கு உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் "ஏக்கங்கள் தீரும் மட்டும்", "சப்பாத்து", "மரணவீடு" எனும் மூன்று குறும் படங்களும், "திராவிடம்"........ 17




நன்றி - சகோதரக் கலைஞர் அவந்த ஆட்டிக்கல

### செய்தித் துளிகள்

#### காவல்துறை அதிகாரி இடமாற்றம்

**கிண்ணியா** காவல்துறை தலைமை அதிகாரி பொல கஹவெல காவல்துறைத் தலைமை அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

#### சிறுவனுக்கு 14 நாட்கள் தடுப்பு

மூதூர், அக்கரைச்சேனையில் வீடொன்றை உடைத்துத் திருட முற்பட்ட பதினைந்து சிறுவனை சிறுவர் நன்நடத்தையில்லத்தில் ஒப்படைக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 15ம் திகதி வழங்கப்பட்ட ஆணையின் படி சிறுவனை எதிர்வரும் 28ம் திகதி வரை திருகோணமலை, வரோதய நகரிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறு மூதூர் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

#### தன்னிறைவே இலக்கு

**கிழக்கின்** விவசாயத்துறையில் நவீன திட்டங்களை அறிமுகப்படுத்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாகாணமாக கிழக்கை மாற்ற வேண்டுமென்பதே தனது நோக்கமென கிழக்கு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்

### செய்தித் துளிகள்

#### முதலை வாயிலிருந்து மீண்டவர் வைத்தியசாலையில்

**தோப்பூர்**, சின்னக்கலுவான் வாய்க்காலில் முதலையிடம் சிக்கியவர் காயங்களுடன் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த துரையப்பா (வயது 38) வாய்க்காலில் தனது மாடுகளுக்கு தண்ணீர் அருந்தக் கொடுத்துக் கொண்டிருந்த வேளை முதலையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். அங்க மீன் பிடித்துக்கொண்டிருந்த மற்றொருவரின் உதவியுடன் மீட்கப்பட்டே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.


#### ரூபா 50,000.00 தண்டம்

**சம்பூர்** மீள்குடியேற்றக் கிராமத்தில் அமைக்கப்படுகின்ற வீட்டுத்திட்டக் கட்டுமானப் பணிகளுக்கு உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிச் சென்ற போது சம்பூர் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா 50,000 ரூபாய் படி மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதவான் ஐ.றிஸ்வான் தண்டம் விதித்துள்ளார்.

## அமெரிக்கப் பிரதிநிதிகள் திருகோணமலைக்கு வருகை – எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் சந்திப்பு

**இ**லங்கை அமெரிக்க நல்லுறவு மற்றும், இலங்கையின் அபிவிருத்தியில் அமெரிக்கா கொண்டுள்ள நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பான சந்திப்பு கடந்த 14ம் திகதி காலை திருகோணமலை அலஸ்தோட்டத்தில் உள்ள அமர்நாத் லேக் விடுதியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை..... 17







இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 19.12.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org